கோகுலம்

27-8-1978 விலை 60 காசு




இந்தியன் பாங்க் ஒப்புதல்: வரம்பை மீறிவிட்டது உண்மைதான்!

IB.019

கடனுதவி/சேமிப்பு விகிதத்தில் தேசியமட்டத்தில் வரையறுக்கப்பட்ட இலக்கு மார்ச் 1979க்குள் 60% ஆனால் இந்தியன் பாங்க் சென்ற ஆண்டிலேயே 90% அளவை எட்டிப் பெரும் சாதனையை புரிந்திருக்கிறது.

கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் தனது 200 கிளைகளுடன் இந்தியன் பாங்க் கிராமப்பகுதிகளில் கடனுதவி/சேமிப்பு விகித அளவில் ஒரு பெரிய சாதனையைச் செய்துவிட்டது. ஆமாம்! 90% அளவிற்கும் மேலாகத் தான்—அதுவும் 1977 டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே. தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் மார்ச் 1979க்குள் அடையவேண்டிய இலக்கு 60% என மத்திய அரசினரால் வரையறுக்கப் பட்டிருந்தாலும் இந்தியன் பாங்க் அந்த வரையறையை கொடுக்கப்பட்ட காலத்திற்கு முன்பே, அதுவும் அதிக அளவில் அடைந்து சாதனையைச் செய்து விட்டது.



இந்தியன் பாங்கின் புதிய சின்னம் ஒரு புதிய எழுச்சிக்குத் தூண்டுகோலாக நிற்கிறது. கடனுதவி/சேமிப்பு விகிதத்தில் இன்னும் சிறப்பாக 90% அளவிற்கும் மேலாக வெற்றியை எட்ட ஊக்கமளிக்கிறது. அதுமட்டுமல்ல. இந்தியன் பாங்கின் சேவை தொடரும் மற்ற இடங்களிலும், உங்களுக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் 100 சதவிகிதம் செல்வச்செழுமை அளிப்பதே தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

இந்தியன் பாங்க்: உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி.

இந்தியன் பாங்க்

31, வடக்குக் கடற்கரைச் சாலை,
சென்னை 600 001.

மலர் - 6 இதழ் - 13
ஆகஸ்ட் 27, 1978.
காளயுக்தி - ஆவணி 11



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் — பாரதியார்

கோகுலம்
சந்தா விவரம் :
இந்தியா :
ஒரு வருடம் — ஆறு மாதம்
ரூ. 15-00 — ரூ. 7-50
வெளி நாடுகள்:
ஒரு வருடம் ரூ. 40-00

வெள்ளைப் புகையா? கறுப்புப் புகையா?

கத்தோலிக்க கிறிஸ்துவர்களின் ஜகத் குருவான புனித போப்பாண்டவர் ஆறுவதுபால், சமீபத்தில் வாடிகன் நகரில் காலமானார். பதினைந்து ஆண்டுகள் போப்பாண்டவராகப் பதவி வகித்து உலகில் எல்லா மதத்தினரின் நன்மதிப்புக்கும் உரியவராக வாழ்ந்தவர் புனிதர் பால். பழைமையான பல சம்பிரதாயங்களைக் காலத்துக்கேற்ப மாற்றிக் கொண்டு செயல் பட்டவர் போப்பாண்டவர் பால்.

அடுத்த போப்பாண்டவர் யார் என்பதில் இன்று உலகின் கவனமெல்லாம் பதிந்துள்ளது. புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுப்பது எப்படி? விசேஷமான சடங்குகளும் சம்பிரதாயங்களும் இதில் கடைப் பிடிக்கப்படுகின்றன. உலகக் கிறிஸ்துவர்களின் ஒப்பற்ற தலைவரான போப்பாண்டவரை, போப்பாண்டவருக்கு அடுத்தபடி மதிப்புடைய கார்டினல்கள் எனப்படும் மதகுருமார்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். வோட்டளிப்பு முறையில்தான் உலகமதத் தலைவர் தேர்ந்தெடுக்கப் படுகிறார். ஆனால் அந்த ஓட்டளிப்பு முறையை எல்லாரும் காண முடியாது. பத்திரிகை நிருபர்களோ, புகைப்படக்காரரோ, டெலிவிஷன் காமிராக்களோ அனுமதிக்கப்படுவதில்லை. வாக்களிப்பில் வெற்றி பெற்றுப் போப்பாண்டவரானது யார் என்பதை அறிய லட்சக் கணக்கான மக்கள் வாடிகன் நகரிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தின் முன்னாலுள்ள பரந்த வெளியில் காத்துக் கிடப்பார்கள். ஒலிபெருக்கிகள் மூலமாகவா வெற்றி பெற்றவரை அறிவிப்பார்கள்? இல்லவே இல்லை. வாடிகன் நகரின் பிரதான புகைப் போக்கியையே அத்தனை கண்களும் பார்த்துக் கொண்டிருக்கும். வெள்ளைப் புகை எழுமானால் முடிவு செய்தாகி விட்டது என்றும் கறுப்புப் புகை வருமானால் போப்பாண்டவர் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதையும் தெரிந்து கொள்ளுவார்கள்.





மறைந்த போப்பாண்டவரின் புனித உடல் அடக்கம் செய்தான பிறகு ரகசிய வாக்கெடுப்புக்கான வேலை தொடங்கும். உலகின் பல பாகங்களிலுமுள்ள கார்டினல்கள் ரோம் நகரில் வந்து கூடுவார்கள். அவர்களிடையே ரகசியப் பேச்சுவார்த்தைகளும் விவாதங்களும் தொடர்ந்து நடைபெறும்.

போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கும் கார்டினல்கள் கூடியுள்ள கட்டிடத்தின் கதவுகள் ஜன்னல்களை மூடிச்சுவர் எழுப்பி விடுவார்கள். அவசியமான செய்திகள், உணவு ஆகியவை உள்ளே போகவும் வெளியே வரவும் சுவற்றில் ஓர் இடைவெளி இருக்கும். அதில் 'டர்ன் டேபிள் லீபிக்ஸிங்' என்ற அமைப்பின் மூலம் — அதுவும் பலத்த கட்டுக் காவல்களுக்கிடையில் அனுப்புவார்கள். உள்ளிருக்கும் கார்டினல்களை இச்செயலின் போது வெளியிலிருப்போர் பார்க்க முடியாது. இவ்வளவு பந்தோபஸ்துக்கள் செய்யப்பட்ட கட்டிடத்தினுள் கார்டினல்களினால் வாக்கெடுப்பு நடைபெறும். கார்டினல்களினால் தேர்ந் தெடுக்கப்பட்ட மூவர் ஓட்டுக்களை எண்ணுவார்கள் மொத்த கார்டினல்களின் வாக்குகளில் மூன்றில் இரண்டு பாகமும் மேலும் ஒரு ஓட்டும் யாருக்கு வருகிறதோ அதுவரை; வாக்கெடுப்பும் ஓட்டு எண்ணுவதும் நடந்து கொண்டே இருக்கும். இப்படியான மெஜாரிட்டி இராதுபோனால் உடனுக்குடன் அந்த வாக்குச் சீட்டுக்களை ஈரமான வைக்கோலுடன் கலந்து கொளுத்தி விடுவார்கள். இது கறுப்பான புகையை வெளிப்படுத்தி முடிவு ஏற்படவில்லை என்ற சமிக்ஞையைக் காத்திருக்கும் மக்களுக்குத் தெரிவிக்கும். நல்ல முடிவுக்கு வரப்பல நாட்களாகலாம். முடிவாகக் கார்டினல்கள் தங்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தானதும் அப்போது ஓட்டுச் சீட்டுக்களைக் காய்ந்த வைக்கோலுடன் சேர்த்துக் கொளுத்துவார்கள். இதிலிருந்து இப்போது வெள்ளைப் புகை எழும். புனித பீட்டர் கோயிலின் முன்னாலுள்ள பரந்த வெளியில் கூடி இருக்கும் மக்கள் வெள்ளம் வெள்ளைப் புகையைப் பார்த்து விட்டுக் குதூகல ஆரவாரமிடுவார்கள். புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கும் முறை இதுதான்.

புகை மூலம் தங்கள் முடிவைக் கார்டினல்கள் மக்களுக்கு அறிவிக்கும் முறை பல நூற்றாண்டுகளாகக் கடைபிடிக்கப்பட்டு வந்தாலும், சிம்னியில் தோன்றும் புகையில் கறுப்பு வெளுப்பு என்று பாகுபாட்டை ஏற்படுத்தியது சமீப காலத்தில்தான். பழங்காலத்தில் கனமான புகை — எவ்விதமுடிவும் ஏற்படவில்லை என்பதையும், மெல்லிய இலேசான புகை இயேசுபிரானின் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார் என்பதையும் அறிவிப்பதாக இருந்தன.

இப்போது காலமான போப் பால் அவர்களுக்கு முந்திய போப்பாண்டவரான போப் ஜான் 1958ல் தேர்ந்தெடுக்கப்படும் போது புகையில் சிறு மாறுதல் ஏற்பட்டு மக்களைக் குழப்பியது. அது என்ன? வெள்ளை ப்டகைக்கு பதில் சாம்பல் நிறப்புகை (கிரேயிஷ்) சிம்னியில் தோன்றியது. ஆகவே 1963ல் போப் பால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாகக் கார்டினல்கள்; பத்திரிகைக்காரர்கள் டெலிவிஷன் காரர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இத்தாலிய ராணுவத்தினர் அளித்த கறுப்பு வெளுப்பு வர்ண வெடிகுண்டுகளை வெடித்துத் தங்கள் முடிவை அறிவிக்க ஒப்புக் கொண்டனர். ஆகவே இப்போது நடைபெறவிருக்கும் தேர்தல் முடிவையும் வைக்கோல் கொளுத்தி அறிவிப்பதற்குப் பதில் இந்த வெடிகளை வெடித்தே அறிவிப்பார்கள். புதிய போப்பாண்டவரை அறியக் உலகம் காத்துக்கிடக்கிறது.

- கௌசிகன்

நல்வழி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

அனந்தலாடேல்

உடல் உறுப்புக்களெல்லாம் பார்ப்பது — சாப்பிடுவது — நடப்பதுபோன்ற பல காரியங்களைச் செய்கின்றன. அவை ஒரு மின்சார யந்திரம் போல் வேலை செய்து கொண்டேயிருக்கின்றன. இந்த உடல் உறுப்புக்களுக்கு ஓய்வு வேண்டும். ஓய்வுக்குத் தூக்கம் வேண்டும். தூங்குவதற்கு முன்பு உடல் உறுப்புகளெல்லாம் களைத்துப் போய் அசதியாக இருக்கும் — தூங்கி எழுந்த பிற்பாடு உடல் புதுத் தெம்புடன் சுறுசுறுப்பாய் இருக்கும்.


ஆனால் அரைகுறைத் தூக்கத்துடன் எழுந்து விட்டாலோ — வேலைசெய்வதற்குச் சோம்பல்பட்டுத் தூங்குவது போல் பாசாங்கு செய்தாலோ அந்த உடம்புக்கு வியாதி வந்துவிடும்; அதனால் தான் நன்றாக அயர்ந்து தூங்கும்பொழுது, நடுவில் யாரையும் எழுப்பக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருசமயம் கர்ணனுடைய தொடையில் அவனுடைய குரு பரசுராமர் தலை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பெரிய குளவி கர்ணனுடைய தொடையில் கொட்டிவிட்டுப் போய்விட்டது. கர்ணனுக்கோ வலி தாங்க முடியவில்லை. இருந்தும் தன்னுடைய குருவின் தூக்கத்திற்குத் தடை வந்து விடுமோவென்று பயந்து தொடையை ஆட்டாமல் — அசையாமல் வலியைப் பொறுத்துக் கொண்டே இருந்தான். இதனால் என்ன தெரிகிறது? எக்காரணத்தை முன்னிட்டும் எவருடைய தூக்கத்திற்கும் இடையூறு செய்யக் கூடாது.

தூங்குவது உடலுக்கு வலிமை — உறுப்புகளுக்குப் பலம். ஆனால் தேவைக்கு அதிகமாகத் தூங்குவது சோம்பேறித் தனத்திற்கும் —, உடல் வியாதிக்கும் காரணமாக ஆகும். தற்காலத்தில் இரவு நடுநிசி பன்னிரண்டு மணி ஒருமணி வரை தூங்காமல் இருக்கும் பழக்கம் ஏற்பட்டு வருகிறது. ஆனால் பகலில் வெகுநேரம் கழித்து தூங்கி எழுந்திருக்கிறார்கள். எழுந்த பிறகும்கூட, எந்தவேலை செய்தாலும் தூக்கத்தினூடே செய்யும்படியாகிறது. ஆகவே ஒரு மனிதனுடைய தூக்கமென்பது இரவு நேரத்தில் அதிகமாக இருக்க வேண்டும். பகலில் தூங்குவது உடலுக்கு அவ்வளவு நல்லதல்ல.

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு என்றபடி உணவு உண்ட பிற்பாடு சிறிது ஓய்வு எடுக்கலாம். ஆனால் பெரும் தூக்கமாகத் தூங்கக் கூடாது. ஒருமனிதனுக்கு சராசரி எட்டு மணி நேரத்திற்குமேல் தூக்கம் இருக்கக்கூடாது.

முன் காலத்திலெல்லாம் இரவில் எட்டு ஒன்பது மணிக்கெல்லாம் படுத்துக் கொண்டு விடுவார்கள். காலை நாலு — நாலரை மணிக்கெல்லாம் எழுந்தும் விடுவார்கள். அதனால் உடல் ஆரோக்கியமாக இருந்தது. உள்ளம் நிறைந்து இருந்தது. தற்காலத்தில் பலர், கவலையையும் — வியாதிகளையும் — வலிகளையும் மறந்து தூங்குவதற்காக மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்கள். பிறகு அதுவே பழக்கமாகி அதிக மாத்திரைகள் சாப்பிட்டு இறந்தும் போகிறார்கள். இதெல்லாம் கூடாதென்றுதான் **'அனந்தலாடேல்'** என்றாள் ஔவைப்பாட்டி.





"கிருஷ்ணா! உன் காரியங்களெல்லாமே விசித்திரமாக இருக்கின்றன" என்றான் துவாரகைக்குச் சென்றிருந்த அர்ஜுனன்.

"என்ன விசித்திரம்? சொல்" என்று ஸ்வாமி அழகிய புன்முறுவலுடன் கேட்டார்.

"நீ இப்படிக் கேட்பதே விசித்திரம் தான். நான் சொல்லாமல் உனக்குத் தெரியாதா என்ன? இருந்தாலும் நீ கேட்பதால் சொல்கிறேன். நான் வருகிற வழியில் ஒரு பரம ஏழையைப் பார்த்தேன். பரம ஸாதுவாகவும் இருந்தான். எப்போதும் 'கிருஷ்ணா, கிருஷ்ணா' என்றே கண்ணீர் விட்டபடி உன் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். நாராயணனை பரமாத்மாவே நர உருவில் நீயாக இந்தப் பூலோகத்துக்கு வந்திருந்தும், உன்னை அவதாரம் என்று உணரும் பாக்கியம் உன் காலத்திலேயே வசிக்கும் மக்களில் சிலருக்குத்தானே உள்ளது? அந்த ஏழை இப்படிப்பட்ட பாக்யசாலி. குழந்தைப் பருவத்தில் நீ செய்த லீலைகளைக் கேள்வி பட்டதிலிருந்தே அவன் உன்னை இறைவன் என்று தெரிந்துகொண்டு பக்தி பூண்டொழுகி வருகிறான். இந்த ஒரு விஷயத்தில் அவன் பாக்கியசாலியாயினும் மற்ற எல்லா விஷயங்களிலும் அவனை நீ பரம துர்பாக்கியசாலியாகவே வைத்திருக்கிறாய். ஏழ்மையில் அவன் பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்லவாம். மனைவி மக்களைப் பராமரிக்க முடியாமல் தவித்தானும். அப்புறம் இதைவிடக் கொடுமையாக, அவனுடைய மனைவி மக்கள் அனைவருமே ஒருவர்பின் ஒருவராக மரணமடைந்து விட்டார்கள். இப்போது நல்ல முதுமைப் பிராயத்தில் உடல் நலிந்த சமயத்தில் அப்பனை வைத்துக் காக்க ஒருவரும் இல்லை. ஒட்டி உலர்ந்த ஒரு மாட்டை வைத்துக் கொண்டு, அது கறக்கும் கால்படி பாலை விற்று ஏதோ கால் வயிற்றுக்குச் சாப்பிட்டுக் கொண்டு தன்னந்தனியனாகக் காலம் தள்ளுகிறான். இந்த நிலையிலும் அலுத்துக் கொள்ளாமல், 'கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறான். இப்பேர்ப்பட்ட உத்தமனுக்கு நீ உன் கருணா கடாக்ஷத்தை வழங்கி அருளாமலிருக்கிறாயே என்று மனம் நொந்தபடி நான் வருகையில், இதைவிட அதிர்ச்சி தரும் இன்னொன்றைக் கண்டேன்..."

"ஊம், அது என்ன?" என்று மிகவும் ஆர்வமுற்றது போல் கேட்டார் மாயாவி ஸ்வாமி.

"சொல்கிறேன். வட்டிக்கடை வைத்த ஒருவனையும் நான் சந்திக்க நேர்ந்தது. கஷ்டத்தில் சிக்கிக்கொண்டு கடனுக்கு வரும் ஏழை எளியவருக்கு அக்கிரம வட்டி விகிதத்தில் கடன் கொடுத்துக் கசக்கிப் பிழிந்தே லக்ஷக்கணக்கில் சம்பாதித்தவனும் இவன். செல்லாக்காசு தானதர்மம் செய்தறியாத கஞ்சன். ஆள்படைகளின் கண்களில் விரலை விட்டு ஆட்டும் கிராதகன். இதெல்லாவற்றுக்கும் மேலாக உன் பெயரைக் கேட்டாலே எரிமலையாகக் கொதிக்கிறவன். என் வாயாலும் சொல்லத் தகாத வண்ணம், 'அந்த இடைப் பயல் கண்ணனா -அவதார புருஷன்? அவன் ஒரு மோசக்காரன். ஏதோ மாயா மந்திர ஜாலம் கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொண்டு அதைக்



காட்டி, அறியா மக்கள் தன்னை ஸ்வாமி என்று நம்புமாறு செய்கிற ஏமாற்றுக்காரன்' என்றெல்லாம் உன்னை நிந்திக்கிறான். பிரேம மூர்த்தியான உன்னுடைய தர்மத்திலேயே என் போன்ற பக்தர்களுக்கும் சந்தேகம் வருமாறு சில விசித்திரங்களைச் செய்து விடுகிறாய்! இப்படித்தான் அந்த வயோதிக ஏழை பக்தனை வறுமையில் வறுக்கிறாய். அதைவிட அதிர்ச்சி தருவதாக இந்தக் கொடிய எதிர்ப்பாளனுக்குத் தினந்தினமும் தன தான்யச் செழிப்பை அதிகமாக்கியபடி இருக்கிறாய். இது ஏன் கண்ணா, இப்படித் தர்மவானுக்குக் கஷ்டமும், அதர்மக்காரனுக்கு சௌக்கியமும் கொடுத்து, நீதி முறைக்கே மாறாக விசித்திரம் செய்கிறாய்?'' என்று முடித்தான் அர்ஜுனன்.

''நிஜமாகவா அர்ஜுனா, நீ சொல்கிறபடி நடக்கிறது? எனக்கு நம்பிக்கையில்லை. இப்போதே புறப்படுவோம். நீ அவர்களை எனக்குக் காட்டு. அப்போதுதான் நம்புவேன்'' என்றார் பகவான்.

அர்ஜுனனுக்கு நிம்மதி உண்டாயிற்று. அவ்விருவரையும் தான், கண்ணனின் கண்ணுக்கு மெய்யாகக் காட்டியதும், கண்ணன் அவரவர்க்குரிய நியாயத்தை வழங்கி விடுவான் என்ற நன்னம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது.


கண்ணனை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

''நான் உன் கண்ணுக்கு மட்டும் தான் தெரிவேன். மற்றவர்களுக்குத் தெரிய மாட்டேன்'' என்றார் கிருஷ்ண பரமாத்மா.

ஸ்வாமியாதலால் அவரால் எதுவும் முடியும். ஒரே இடத்தில் பலர் கூடியிருக்கும்போது சிலருக்கு மட்டுமே அவர் தெரிவார். சிலருக்கு மட்டுமே அவரது நறுமணம் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது.

அர்ஜுனனும் சாதாரண மனிதனைப் போல மானுடவேடமிட்டுச் சென்றான்.

முதலில் ஏழை பக்தன் இருந்த இடத்துக்குப் போனார்கள். ஒரு பொத்தல் குடிசையின் வாசலில் வாடி வதங்கிய ஒரு மாட்டை வைத்துக் கொண்டு அதைவிட வாடி வதங்கிய அந்தக் கிழவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் வாய் ''கிருஷ்ணா, கிருஷ்ணா'' என்று ஜபித்துக் கொண்டிருந்தது. எதிரே நளினக் கண்ணன் தெரியாவிடினும் அவன் தனது மனக்கண்ணில் நீலமேக சியாமளனாய், தலையில் மயிலிறகும்,



இடுப்பில் பீதாம்பரமும் புனைந்து, உதட்டினில் புல்லாங்குழலை வைத்து ஊதும் கண்ணனைக் கண்டபடி ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான்.

அக்கம் பக்கத்திலிருந்தவர்கள், ''இந்தக் கிழவனுக்குக் கொஞ்சமாவது மூளையிருக்கிறதா? கிருஷ்ணன் இந்த மாதிரி ஏழைகளை எங்காவது கவனிப்பானா? துவாரகையில் தனக்குத்தானே கோயில் மாதிரி பெரிதாக அரண்மனை கட்டிக்கொண்டு வாழுகிற அவன் தன்னைச் சுற்றிப் பஞ்ச பாண்டவர்கள் மாதிரியான ராஜ குடும்பங்களையும் பிரபுக் குடும்பங்களையும் வைத்துக் கொண்டு, அவர்களுக்குத் தான் உதவி செய்வான். இது புரியாமல் இந்த தரித்திரக் கிழவன் அவனையே வழிபடுகிறான். இன்னொரு மூளையில்லாத காரியம்: இவன் மாடு, கறப்பதே கால்படி. அதிலும் முக்கால் வாசியைக் கன்றுக்கு விட்டுவிடுகிறான். இன்றைக்குப் பரிதாபமாயிருந்ததென்று முழுப்பாலையுமே கன்றுக்கு விட்டு விட்டான். அதனால் தன் வயிற்றில் அடியோடு மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கிறான்'' என்று பேசிக் கொண்டனர்.

அர்ஜுனனின் மனம், உருகிற்று. கண்ணனைப் பார்த்தான். கண்ணனும் அப்படியே இளகி விட்டதாகத் தெரிந்தது.

இதுதான் சமயமென்று அர்ஜுனன் ''பார்த்தாயா கண்ணா? நான் சொன்னது நிஜம்தானே? இந்த உத்தமனுக்கு இப்போதே அநுக்கிரகம் செய்'' என்று தூண்டினான்.

உடனே கண்ணன் அக்கிழவனும் மாடும் இருந்த திசை நோக்கித் தமது கமலம் போன்ற கையைத் தூக்கி ஆசீர்வாதம் செய்தான்.

அப்போது அங்கே பொன்மழையே பெய்துவிடப் போகிறது என்று அர்ஜுனன் ஆர்வத்துடன் பார்த்தான்.

ஆனால் நடந்ததோ, முற்றிலும் நேர்மாறான ஒரு விபரீதம்!

கண்ணன் ஆசி வழங்கியவுடன் அந்தக் கிழவனின் ஒரே உடைமையாகவும், அவன் உயிர் வாழ ஒரே உபாயமாகவும் இருந்த அந்தப் பசுமாடு உயிரிழந்து விழுந்து விட்டது!

''கிருஷ்ணா'' என்று அலறியபடி, இத்தனை காலமாக உறுதி தளராமலிருந்த கிழவன் தரையில் சாய்ந்தான்.

''ஐயோ, என்ன கண்ணா இப்படி முன்னிலும் அநியாயம் செய்துவிட்டாய்? அதுவும் என் வாயால் நான் சொல்லியே இந்தக் கிழவனுக்கு இப்படிப்பட்ட கொடுமை நேரும்படி ஆகிவிட்டதே!'' என்று அர்ஜுனன் தவித்துத் துடித்தான்.

(இக்கதை அடுத்த இதழில் முடியும்)


ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்

ஹாம்லெட்

கிருஷ்ணவேணி

(ஷேக்ஸ்பியரின் துன்ப இயல் நாடகங்களுள் ஹாம்லெட்டுக்குத் தனி இடம் உண்டு. இலக்கிய அன்பர்களின் பாராட்டை அதிகமாகப் பெற்ற நாடகம் இது)





டென்மார்க் மன்னரின் மரணத்துக்குப் பிறகு அவரது சகோதரன் அரியணை ஏறினன். இறந்த மன்னரின் அருமை மகன்தான் **ஹாம்லெட்**. பட்டத்து இளவரசனும் கூட. அரியணை ஏறிய **கிளாடியஸ்** இறந்த தன் சகோதரனின் விதவை மனைவியையே மணந்து தன் பட்டத்து ராணியாக்கிக் கொண்டான். தந்தை மறைந்து இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. அதற்குள் தன் தாயின் இச்செயல் ஹாம்லெட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அன்புள்ளமும் இனிய சுபாவங்களும் கொண்ட இளவரசன், ஹாம்லெட்டின் போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டன. தனிமையை நாடிப் போனன். அவன் முகத்தில் தவழ்ந்த புன்சிரிப்பு மறைந்தது. உயிருக்குயிராக நேசித்த காதலி **ஒஃபீலியா**விடமிருந்தும் ஒதுங்கிப் போனன். அவன் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தது நண்பன் **ஹொரேஷியோ** ஒருவன்தான்.

ஒரு நாள் இரவு **எல்ஸினூர்** கோட்டை கொத்தளத்தின் மீது அரசாங்கக் காவல் அதிகாரிகள் சந்தித்துக் கொண்டார்கள். பாரா மாறிச் சிறிது நேரமே ஆகியிருந்தது. அந்த மூவர் **ஹொரேஷியோ, பெர்னர்டோ, மார்செலஸ்**. முதல் நாள் இரவு கொத்தளத்தின் மீது கண்காணிப்புச் செய்யும்போது ஹாம்லெட்டின் தந்தையின் ஆவியைப் பார்த்தார்கள் பெர்னர்டோவும் மார்செலஸும். தங்களுக்கு நேர்ந்த அனுபவத்தை ஹொரேஷியோவிடம் கூறிய போது அவர்கள் கூற்றை அவன் நம்பவில்லை. ஆகவே இன்று அவர்கள் கூற்றைப் பொய்யாக்க வேண்டும் என்பதற்காகவே ஹொரேஷியோ அவ்விருவருடன் காவல் கண்காணிப்பில் கலந்து கொள்ள வந்தான். அதே போல நண்பர்கள் இருவரும் இறந்த மன்னரின் ஆவி இன்று மறுபடியும் தோன்றும் என்ற நம்பிக்கையோடிருந்தார்கள்.

''மன்னரின் ஆவியைக் கண்டதாக நாம் கற்பனைச் சரடு விடுவதாக ஹொரேஷியோ நினைக்கிறன்'' என்றன் மார்செலஸ். பேய் பிசாசு ஆவிகளில் நம்பிக்கை இல்லாதவனை ஹொரேஷியோ இருவரை நோக்கி ஏளனமாகச் சிரித்தபடியே ''அந்த ஆவி மறுபடியும் இன்று தோன்றது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்'' என்றன்.

''நேற்று நள்ளிரவு சரியாக ஒரு மணி அடித்தபோது....'' என்று அந்தக் காட்சியை விவரிக்கத் தொடங்கிய பெர்னர்டோ சட்டென்று தன் பேச்சை நிறுத்தினன். இருள் சூழ்ந்த அந்த இரவில் இறந்த மன்னரின் நெடிதுயர்ந்த கம்பீரமான ஆவி



மௌனமாக அவர்கள் முன் தோன்றியது. தன் உடைவாளின் கைப்பிடியைச் சிலுவையாக்கித் தூக்கிப் பிடித்தபடியே அந்த ஆவியை நோக்கி முன்னேறினான் ஹொரேஷியோ.

நிலவொளியிலே அவர்கள் கண் முன்னால் சில விநாடிகள் மினுக்கிட்டுவிட்டு நகர்ந்து மறைந்தது ஆவி. ''இறந்த நமது மன்னரைப் போலவே இல்லை அந்த ஆவியின் தோற்றம்?'' என்று குழறினான் பெர்னார்டோ. நடுங்கும் குரலில் ஹொரேஷியோ அதை ஆமோதிக்க வேண்டியிருந்தது. ''உண்மை தான். அவரைப் போலவேதான் இருக்கிறது.'' தடதடக்கும் தன் உணர்ச்சிகளை நிதானப்படுத்திக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தபோது நிழல்களினூடே அந்த ஆவி மறுபடி மிதந்தபடி தோன்றியது. அந்த மூன்றுபேரும் வெலவெலத்துப் போனார்கள். குசுகுசு



வென்று பேசிக் கொண்டார்கள். இந்த ஆவியின் தோற்றத்துக்கான பொருள் என்ன? இறந்த தங்கள் மன்னரின் ஆவி நம்மை இப்படித் தொடர்ந்து அலைவானேன்? விடை கிடைக்காத வினாக்களை எழுப்பி ஆர்வமுடன் விவாதிக்கலானார்கள்.


விடியும்பொழுதில் அந்த ஆவி மறுபடியும் தோன்றியது. ஹொரேஷியோ அதன் பாதையின் குறுக்கே நின்று உடைவாளின் கைப்பிடியைச் சிலுவையாக உயர்த்தி நிறுத்தி அதனுடன் விவகாரம் பேச முற்பட்டான். ஆவி அவனிடம் ஏதோ சொல்ல ஆரம்பிக்கும் வேளையில் எங்கோ தொலைவில் ஒரு சேவல் கூவியது. ஆவி மௌனமாகிக் கரைந்து மறைந்து போயிற்று.

பொழுது புலர்ந்தது. காவலும் முடிந்தது. அந்த மூன்று வீரர்களும்



அவசரம் அவசரமாக அரண்மனைக்கு ஓடினார்கள் — இளவரசன் ஹாம்லெட்டிடம் அவனுடைய தகப்பனாரின் ஆவியைச் சந்தித்ததைக் கூற வேண்டுமென்ற முடிவோடு. தோன்றிய ஆவி அவர்களுடன் பேசவில்லையாயினும்கூட அடுத்த நாள் அது மறுபடி தோன்றித் தன் மகனுடன் பேசக் கூடும் என்று நம்பினார்கள்.

தன்னுடைய தாயாரின் மறு மணத்தினால் வெறுப்பும் வேதனையும் அடைந்திருந்த ஹாம்லெட் அந்த மூன்று வீரர்களும் அவன் முன் தோன்றியபோது எதிலுமே பற்றில்லாதவனாக இருந்தான். ஆனால் அவர்களுள் தன் உயிர்த் தோழன் ஹொரேஷியோவைக் கண்டதும் சற்றே உற்சாகம் கொண்டான். கொத்தளத்தின் மதில் சுவர் மீது தன் தந்தையின் ஆவி தோன்றிய செய்தியைக் கேட்டதும் தாங்க முடியாத








வியப்பும் பரபரப்பும் அடைந்தான் ஹாம்லெட். அம்மூவரையும் கேள்விகளால் துளைத்து முழு விவரத்தையும் தெரிந்து கொண்டான். அன்றிரவு மார்செலெஸ் ஹொரேஷியோ இருவருடன் காவல் பணியில் தானும் கலந்து கொள்வதாகத் திட்டமிட்டான்.

அன்றிரவு மூன்று பேரும் கொத்தளத்தின் மீது ஆவியை எதிர்பார்த்து தவிப்போடு காத்திருந்தார்கள். நள்ளிரவுக்குச் சற்று நேரத்துக்குப் பிறகு ஹாம்லெட்டின் தந்தையுடைய ஆவி தோன்றியது. ''அரசே... அப்பா...! டேன் இனத்தின் அதிபதியே...!'' என்று ஆனந்தத் தவிப்பில் அரற்றினான் ஹாம்லெட். ''பேசுங்கள்...! சொல்ல விரும்பியதைச் சொல்லுங்கள்!'' தந்தையின் ஆவியிடம் மன்றாடினான் மகன். ஹொரேஷியோவையும் மார்செலஸையும் லட்சியம் செய்யாமல் அந்த ஆவி தன் மகனைப் பார்த்து ''நான் உன்னுடன் தனிமையில் பேச வேண்டும்'' என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தது. தன்னைப் பின்தொடருமாறும் ஹாம்லெட்டிடம் மௌனமாகப் பணித்தது.


ஹாம்லெட்டின் தோழர்கள் ஆவியின் பின்னால் அவன் போவதைத் தடுத்தார்கள். ''போகாதே'' என்று கெஞ்சினார்கள். ''என் தந்தையின் ஆவியைப் பின்தொடர நான் ஏன் பயப்பட வேண்டும்?'' என்று வியப்புடன் கேட்டான் ஹாம்லெட். ''அது உன்னை மலையுச்சிக்கு அழைத்துப் போய்க் கீழே தள்ளிக் கொன்றுவிடும்'' என்று கூறித் தங்கள் நண்பனை ஹாம்லெட்டைத் தடுத்து நிறுத்தினார்கள்.

அவர்களுடைய பிடியிலிருந்து திமிறிக்கொண்டே ''என்னை விடுங்கள்'' என்று கத்தினான் ஹாம்லெட். தன்னைத் தடுத்து நிறுத்தினால் அவர்களைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினான். பிறகு ஆவியை நோக்கி ''நீ போ. நான் உன்னைத்தொடர்ந்து வருகிறேன்'' என்று கூறினான். நண்பனைத் தடுத்து நிறுத்தும் திறனிழந்த நிலையில் ஹொரேஷியோவும் மார்செலஸும் அவன் ஆவியைத் தொடர்ந்து செல்வதைப் பார்த்தபடியே செயலிழந்து நின்றனர். பிறகு ''நாமும் அவனைத் தொடர்ந்து போவோம்'' என்றான் மார்செலஸ். மௌனமாக அவ்விருவரும் சற்றுத் தொலைவில் ஹாம்லெட்டைப் பின்பற்றினார்கள். அந்தத் தவிப்பு ஹாம்லெட்டுக்குத் தாங்க முடியாததாக இருந்தது.

ஒரு நிலையில் அதற்கு மேல் தன்னால் அந்த ஆவியைப் பின்தொடர்ந்து போக முடியாதென்பதை







உணர்ந்தான். ஆகவே, ''பேசுங்கள்... தந்தையே! சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்....!'' என்று கத்தினான் அதனிடம்.

ஆவியும் நின்றது. ''என்னை நன்றாகப் பார்....'' ஆவி பேசலாயிற்று. ,'உன் தந்தையின் ஆவி நான். இப்படி இரவு வேளைகளில் அலையும் பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளேன். மகனே, ஹாம்லெட்! நீ உன் தந்தையை நேசிப்பவனானால் அவருடைய கொலைக்காக நீ பழிவாங்கு. நான் தோட்டத்திலிருக்கும் போது பாம்பு தீண்டி இறந்து விட்டதாக எல்லோரையும் நம்ப வைத்திருக்கிறான் கிளாடியஸ்' ஆனால் என்னைக் கடித்துக் கொன்ற பாம்பு இப்போது என் கிரீடத்தை அணிந்து கொண்டு அரியணையில் அமர்ந்திருக்கிறது! நான் தோட்டத்தில் தூங்கும்போது என் காதிலே கொடிய விஷமிட்டுக் கொன்றது உன் சித்தப்பா கிளாடியஸ்தான்.''

ஆவி கூறிய செய்தியால் திகைத்துத் திக்குமுக்காடிப் போனான் ஹாம்லெட். மூச்சு விடுவதையும் மறந்து அது கூறும் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆவி தொடர்ந்து கூறிற்று. ''கிளாடியஸ் என்னுடைய உயிரை மட்டும் பறிக்கவில்லை. என் மனைவியையும் சிங்காதனத்தையும் பறித்துக் கொண்டு விட்டான்.''

அவருடைய கொலைக்குப் பழிவாங்குவதாக ஹாம்லெட் உறுதி அளித்த போது ஆவி கூறியது: ''உன் தாயாரிடம் அன்பாக இரு. நான் விடை பெற வேண்டிய வேளை நெருங்கிவிட்டது. அதோ மின்மினிப் பூச்சிகள் விடியற்காலை வேளை நெருங்கி வருவதை அறிவிக்கின்றன..... அன்பு மகனே! என்னை மறந்து விடாதே!''

ஆவி மறைந்தது. சித்தப்பா கிளாடியஸை அவரது சூழ்ச்சிக்குப் பழி வாங்கியே தீருவதாகச் சத்தியம்செய்து கொண்டான். அப்போது ஹொரேஷியோவும் மார்செலஸும் அருகில் வந்து அவனுடன் சேர்ந்து கொண்டார்கள். தனக்கும் தன் தந்தையின் ஆவிக்கும் நடந்த உரையாடலைக் கூறிய ஹாம்லெட் அன்றிரவு நடந்ததை வேறு யாரிடமும் கூறக் கூடாது என்று அவர்களிடம் சத்தியம் செய்து தரும்படி கேட்டுப் பெற்றுக் கொண்டான். ''வருங்காலத்தில் என்னுடைய நடவடிக்கைகள் விநோதமாக, மாறுபட்டதாக இருக்கலாம். ஆனால் அதன் காரணத்தைக் குறிப்பாகக் கூட யாரிடமும் நீங்கள் உணர்த்தக் கூடாது'' என்றும் அவர்களிடம் வாக்குறுதி வாங்கிக்கொண்டான் ஹாம்லெட்.

(அடுத்த இதழில்)

குட்டிக் கதைகள்

உங்களுக்காகத் தொகுத்தவர்:
கு. அழகிரிசாமி

காக்கையும் கழுகும்

கழுகு ராஜா ஒரு காக்கையை வானம்பாடியின் ஸ்தானத்திற்கு உயர்த்தியது. காக்கை தனக்குக் கிடைத்த புதுப் பதவியை எண்ணிப் பெருமை கொண்டு, ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்து பாடத் தொடங்கியது. அந்தப் பாட்டை மற்ற பறவைகள் எப்படி ரஸிக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள அது சுற்றிலும் திரும்பிப் பார்த்தது. அப்போது பல பறவைகள் கேலியாகச் சிரித்துக் கொண்டே பறந்து சென்றன. வேறு பல பறவைகள் காக்கையைக்



கேவலமாகப் பழித்துப் பேசிக் கொண்டே பறந்தன. காக்கைக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே கழுகினிடம் ஓடிவந்து பின்வருமாறு புகார் செய்தது.

''தாங்கள் எனக்கு வானம்பாடி பதவி கொடுத்தீர்கள். அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டு நான் பாடும் போது, என் பாட்டைப் கேட்டு மற்ற பறவைகள் பரிகாசமாகச் சிரிக்கின்றன.''

அப்போது கழுகு கூறியதாவது: ''நான் ஓர் அரசன்தானே யொழியக் கடவுள் அல்ல. காக்கைக்கு வானம் பாடி பதவி கொடுக்க என்னால் முடியும்; ஆனால் காக்கையை வானம் பாடியாக மாற்ற முடியாது.''

குரங்கும் மூக்குக்கண்ணாடியும்

ஒரு குரங்குக்கு வயதாகிக் கண் பார்வையும் மங்கிவிட்டது. பார்வை மங்கி விட்டதற்காக யாரும் கவலைப் படத் தேவையில்லை என்றும், கண்ணாடி போட்டுக் கொண்டால் எதையும் தெளிவாகப் பார்க்கலாம் என்றும் மனிதர்கள் பேசிக் கொண்டதை ஒருநாள் குரங்கு கேட்டது. உடனே அது ஆறு கண்ணாடிகளைக் கொண்டு வந்து அவற்றை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் திரும்பித் திருப்பிப் பார்த்தது. அப்புறம் அந்தக் கண்ணாடிகளைத் தலையின்மேல் வைத்துக் கொண்டது; பிறகு வாலில் கட்டிக் கொண்டது. அதன்பின் மூக்குக் கண்ணாடிகளை முகர்ந்து பார்த்தது; கடைசியில் நக்கியும் பார்த்தது. என்ன செய்தும் பார்வை தெளிவடையவில்லை.

''சீ! மனிதர்கள் பெரும் புளுகர்கள்! அவர்கள் பேச்சை மூடர்கள் நம்புவார்கள். மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டால் கண்பார்வை தெளிவடையும் என்று சொன்னார்களே, எவ்வளவு பெரிய அண்டப் புளுகர்கள்!'' என்று சொல்லிக் கொண்டே எரிச்சலோடு ஆறு கண்ணாடிகளையும் கல்லின்மேல் போட்டுத்



நூல் நூலாக நொறுக்கி விட்டது குரங்கு.

இப்படித்தான் நாமும் நமக்குப் புரியாத விஷயங்களைப் பற்றிக் கேவலமாய்ப் பேசுகிறோம்.

சீப்பு

ஒரு தாய் தன் மகனுக்கு ஒரு சீப்பு வாங்கிக் கொடுத்தாள். அவன் எந்த நேரமும் அதைக் கொண்டு தன் தலையை வாரிய வண்ணமாக இருந்தான். ஒரு தடவைகூட அது அவன் தலைமயிரைப் பிடித்து இழுக்கவோ பிடுங்கிக் கொண்டு வரவோ இல்லை. வாரி விடும்போது சுகமாகவே இருந்தது.

ஒருநாள் அந்தச் சிறுவன் சீப்பை வீட்டில் வைத்துவிட்டு வெளியே விளையாடப்போனான். அப்போது அவன் தலைமயிர் தாறுமாறாகக் கலைந்து சிக்கு விழுந்துவிட்டது. வீட்டுக்குத் திரும்பி வந்ததும் சீப்பை எடுத்து எடுத்து வாரினான். சீப்பு தலைமயிரில் பதியாமலும், அழுத்தி வாரினால் ரோமங்களைப் பிடுங்கிக் கொண்டும் வந்தது. வலி பொறுக்க முடியாவில்லை. உடனே அந்தச் சிறுவன், ''ஏ சீப்பே! நீ எவ்வளவு கெட்ட சீப்பாக மாறி விட்டாய்!'' என்றான்.

அதற்குச் சீப்பு, ''நான் மாறவில்லை. எப்போதும் போல்தான் இருக்கிறேன். உன் தலைமுடிதான் சிக்கு விழுந்து போய்க் கிடக்கிறது. அதன் பேரில்தான் நீ குற்றஞ் சாட்ட வேண்டுமே ஒழிய, என்னைச் சொல்வதில் நியாயமே இல்லை'' என்று கூறியது.

ஆனால் பையனோ, அந்தச் சீப்பை ஆற்றில் எறிந்து விட்டான். அதை ஜலதேவதைகள் எடுத்து வைத்துக் கொண்டு தங்கள் தலையை வாரி விட்டுக் கொள்கின்றன.



கடந்த இதழ்களில் வெளியாகியிருந்த ஆசனங்களை உங்களில் எத்தனை பேர் பயிற்சி செய்தீர்கள்? ஏதாவது பலன் இருந்ததா? 'உடம்பெல்லாம் ஒரே வலி' என்று முணுமுணுப்பது காதில் விழுகிறது! வலியைப் பார்த்தால் வலுவும் வனப்புமாக வாழ ஆசைப்படக்கூடாது! இதோ இன்னொரு ஆசனம். எல்லாமே உங்களுக்காக மிக எளிதான ஆசனங்களையே இங்கு அறிமுகப் படுத்துகிறோம்.

பெண்டுலம் என்றால் உங்களுக்குத் தெரியும். 'சுவர்க் கடிகாரத்தை விநாடி தவறாமல் இயங்க வைப்பது இந்தப் பெண்டுலத்தின் இயக்கம்தானில்லையா? உங்கள் உடலின் மேல் பாகத்தைப் பெண்டுலமாக இயக்கும்படிச் செய்வது ஓர் ஆசனம்.

(1) கால்களைச் சற்றே அகற்றி வைத்துக் கொண்டு நிமிர்ந்து நில்லுங்கள்.

(2) மூச்சை உள்ளுக்கு இழுத்தபடியே இரு கைகளையும் பக்கவாட்டிலே தலைக்கு மேலாகத் தூக்குங்கள். கால்களின் நிலை மாறக் கூடாது. முதுகும் வளையக் கூடாது.

(3) அப்படியே இடுப்பை வளைத்து, உடலின் மேல் பாகத்தையும் கைகளையும் முன்னால் கொண்டு வந்து குனியுங்கள். முழங்கால் வளையக் கூடாது. இடுப்புக்கு மேலுள்ள பாகத்தைத் தளர விடுங்கள். இரண்டாவது நிலையில் உள்ளுக்கு இழுத்த மூச்சை இப்போது வெளிவிடுங்கள்.


(4) இப்படிக் குனிந்த நிலையிலேயே இடுப்பை மட்டும் இயக்கி; பெண்டுலத்தைப் போலக் கைகளை...


(5) இப்படியும் அப்படியுமாக இயக்குங்கள். இம்மாதிரி ஐந்து ஆறு முறை கைகளைப் பக்கவாட்டில் பெண்டுலம் போல ஊசலாட விடுங்கள். பிறகு பெண்டுல இயக்கத்தை நிறுத்தி....

(6) மெதுவாக... மெது.. மெதுவாக நிமிருங்கள்...

(7) ஆரம்ப நிலைக்கு — நிமிர்ந்த முதுகும் நேரான பார்வையுமாக நிமிர்ந்து நின்றதும் உடலைத் தளர் நிலைக்கு (Relax) உட்படச் செய்யுங்கள்.

இந்தப் பெண்டுலப் பயிற்சியினால் உங்கள் இடுப்பும் கால்களும் வலுப்படும்.









ஆசனம் போடுங்கள் ஆரோக்கியமாக வாழுங்கள்!

பெண்டுலம் என்ற ஆசனம் போடும்
பெண்: கற்பகமீனு:


புகைப்படங்கள்:
உத்ரா







ஏர் இந்தியாவின் புதிய யூகே-ஐரோப்பா கவர்ச்சிகரமான பயணத்திட்டம் பற்றிக் கேட்டால் விண்ணில் பறப்பீர்.



கனவை நனவாக்க கட்டுவீர் மூட்டையை.


சரணம் கணேசா!

கதை: ஹஸ்தினி
படக்கதை அமைப்பு: வாண்டு மாமா


புதிய சித்திரக் கதை

சித்திரம்: விநு




அடுத்த விநாடி தலை தனியாகவும் உடல் தரையிலும் சரிந்தது.
ஹா, இதென்ன? பரமேசுவரா இதென்ன அக்கிரமம். எனக்கே இக் கொடூரம் நிகழலாமா?
பார்வதி குழந்தையின் உயிரற்ற உடலைச் சிவபெருமான் முன் கிடத்திப் புலம்புகிறாள்.
பார்வதி வருந்தாதே. இந்தக் குழந்தையை உருவாக்கி உயிர் கொடுத்தவளே சரியில்லை.


சனி பகவான் மிக உக்கிரமான வேளையிலிருக்கும் போது நீ குழந்தைக்கு உயிர் தந்தாய். அதனால் அவன் இப்படிச் செய்து விட்டான். இதுவும் நன்மைக்குத்தான்....
நன்மைக்கா எப்படி?
அது ஒரு கதை சொல்கிறேன் கேள். கஜமுகாசுரன் என்று ஒரு அசுரன் பிரம்மாவை நோக்கிக் கடும் தவம் புரிந்தான்....
கஜமுகா. உனக்கு என்ன வரம் வேண்டும்?
பிரம்மதேவா! ஆண் தொடர்பில்லாமல் பிறந்த குழந்தையால்தான் எனக்கு மரணம் ஏற்பட வேண்டும். அது மட்டுமல்ல....
....அந்தக்குழந்தை மனித இனமாகவும் இருக்கக் கூடாது. மிருகமாகவும் இருக்கக் கூடாது. எவ்வித ஆயுதத்தினாலும் அக்குழந்தை என்னைக் கொல்லக் கூடாது.
இப்படியொரு விபரீதமான வரம் பெற்ற அந்தக்கஜமுகாசுரனுக்கு இதோ நீ படைத்த இந்தக் குழந்தையால் வாழ்வு முடியப் போகிறது.
அதெப்படி பிரபோ?
(தொடரும்)



திருமலைக்கு விஜயம் செய்யுங்கள்

திருமலை, ஏழுமலை — உலகிலேயே மிக உன்னதமானதும் புனிதமானது மான ஓர் இடம். மனிதகுலம் உய்விக்க மகாவிஷ்ணு ஸ்ரீவெங்கடேசப் பெருமானாக அவதாரம் செய்த இடம் இந்தத் திருமலை. ரிஷிகளாலும், மஹான்களாலும் பெருமை பெற்ற, புண்ணியன் வதியும் இந்தப் புனிதபூமி ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சித்தூர் ஜில்லாவில் கடல் மட்டத்துக்கு 3000 அடிகளுக்கு மேல் அமைந்துள்ளது. ஆண்டு முழுதும் இனிமையான சீதோஷ்ணநிலை.

திருமலையின் அடிவாரத்திலுள்ள திருப்பதிக்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ரயில்வண்டி இணைப்பு இருக்கிறது. சென்னை, பங்களூர், ஹைதராபாத் ஆகிய இடங்களிலிருந்து எப்போதும் பஸ் வசதியும் இருக்கின்றது. அதிகாலையிலிருந்து, நள்ளிரவுவரை மலையடிவாரத்திலிருந்து திருமலைக்கு ஏராளமான பேருந்துகள் இரண்டு மலைப்பாதைகள் வழியாகச் செயல்படுகின்றன. பக்தர்கள் காலை 5 மணியிலிருந்து இரவு 10மணிவரை ஸ்ரீவெங்கடேசப் பெருமானைக் கண்குளிரக் காணலாம்.

சகல வசதிகளோடுகூடிய யாத்திரிகர்களுக்கான தங்குமிடங்கள் வாடகைக்கும் இலவசமாகவும் திருப்பதியிலும் திருமலையிலும் கிடைக்கவகை செய்யப்பட்டுள்ளது.

யாத்திரிகர்கள் திருமலையைத்தவிர, ஸ்ரீகோவிந்த ராஜஸ்வாமி, ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி, ஆகிய புனித கோயில்களைத் திருப்பதியிலும் ஸ்ரீவெங்கடேசப் பெருமானின் துணைவியாரான தாயார் ஸ்ரீபத்மாவதி தேவியாரைத் திருச்சானூரிலும் தரிசனம் செய்து மகிழலாம். மங்காபுரம் வெங்கடேஸ்வரர், நாராயணவனம் கல்யாண வெங்கடேஸ்வரர், நாகலாபுரத்திலுள்ள ஸ்ரீவேத நாராயணசுவாமி ஆகிய தலங்களும் பார்த்துப் பரவசப் படவேண்டிய இடங்களாகும்.

நீங்கள் அளிக்கும் காணிக்கைகள் கல்வி, பக்தி, சமூக காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் விவரங்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்

திருமலை திருப்பதி தேவஸ்தானங்கள்

திருப்பதி

சித்தூர் ஜில்லா, ஆந்திரப்பிரதேசம்





நட்டாற்றில் ஒரு நாடகம்

ஆற்று மணலில் வீடுகட்டி
அம்மா அப்பா விளையாட்டு
நேற்று நடந்து முடிந்தாலும்
நினைவில் இன்று வருகிறது!

குடும்பத் தலைவன் ஆறுமுகம்
குடித்துவிட்டு வீட்டுக்குள்
இடும்பு செய்ததை நினைத்தாலே
எனக்குச் சிரிப்பு வருகிறது!

கடனைக் கேட்க வந்தவனை
கையால் ஓங்கி அடித்திட்டான்!
உடனே டெலிபோன் செய்திடவே
ஓடி வந்தார் போலீசும்.


குடித்து ஆட்டம் போட்டவனை
கூட்டிச் சென்றார் ஸ்டேஷனுக்கு!
பிடித்துத் தடுக்க முடியாமல்
பிள்ளைகள் நாலும் அழுதிடவே!


அருமை அப்பா போய்விட்டால்
அம்மா எப்படி உழைத்திடுவாள்?
உருக்க மாக நடித்தார்கள்!
உண்மை போலத் துடித்தார்கள்!

சும்மா பட்டினி இருப்பதுபோல்
சோர்ந்து துவண்டாள் மீனாட்சி!
அம்மா நடிப்புப் பிரமாதம்!
அப்பா நடிப்பு ஏழன்தான்!

உலகில் குடியால் பலகுடும்பம்!
ஒழுக்கம் கெட்டே அழிகிறது!
பலபேர் குடும்பம் பலநாளும்
பசியால் வாடித் துடிக்கிறது!

• எஸ்.ஆர். சின்னமணி •







வண்ணமா, எண்ணமா?

புலவர் கு. கணபதி

காக்கை காக்கை நீயேதான்
கரியைப் போலக் கறுப்புத்தான்!
மூக்கு வாயால் நீகரைந்தால்
மூடிக் காதைப் பொத்திடுவேன்
காக்கை அதனால் உன்னைத்தான்
கண்டால் எனக்கு வெறுப்புத்தான்
வாக்கும் உடலும் அழகின்றி
வாழ லாமோ இவ்வுலகில்?

தாக்கி என்னைப் பேசிட்ட
தங்க வண்ணப் பெண்ணே! கேள்!
ஏக்கம் கொண்டு பசியாலே
ஏழை அருகில் இருந்தாலும்
மூக்கைப் பிடிக்க உண்டிடுவீர்!
மாந்தர் என்ற பேர்கொண்டீர்!
பாக்கின் அளவாம் உணவினையும்
பகிர்ந்தே நாங்கள் உண்டிடுவோம்!

சிட்டுப் பெண்ணே! சிங்காரி!
சிவப்பைக் கண்டு மயங்காதே!
எட்டிப் பழந்தான் சிவப்பென்றே
எடுத்தே எவரும் உண்பாரோ?
கட்டி வெல்ல இதயத்தைக்
காக்கைக் கூட்டம் பெற்றதுவாம்!
மட்ட மாக எண்ணாதே
மனமே உலகில் உயர்ந்ததுவாம்!

அன்னத்தாவி மீட்கப்பட்டாள்!

-வாண்டுமாமா-

வாக் வாக் தீவுகளையெல்லாம் சுற்றியலைந்து ஏழு நாட்களுக்குப் பிறகு இளைய ராணி சேனுவுடனும் அவள் குழந்தைகளுடனும் திரும்பினாள், மூதாட்டி.

''அந்த வாலிபன் ஹாஸனை அழைத்து வா. இந்தக் குழந்தைகள் அவனுடையனவா இல்லையா என்பதை நான் அறிய வேண்டும்'' என்றாள் ராணி நூர்.

ஹாஸன் ராணி அமர்ந்திருந்த கூடத்துக்குள் நுழைந்தபோது அவனுடைய இரு குழந்தைகளும் பஞ்சு மெத்தையின் மீதமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. உள்ளே நுழைந்த ஹாஸனைக் கண்டதும் குழந்தைகள் அவனை இனம் கண்டுகொண்டு, ''அப்பா!'' என்று கூவியபடி ஓடின.

உடனே ராணி ஆத்திரத்துடன் எழுந்திருந்து குழந்தைகளை அவனிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கி அப்புறப்படுத்திவிட்டுத் தன் அடிமைகளை அழைத்தாள். ஹாஸனைக் கோட்டைச் சுவர்களுக்கு வெளியே கொண்டுபோய் அடித்து விரட்டும்படி ஆணையிட்டாள். நகருக்கு வெளியே இழுத்துத் தள்ளப்பட்ட ஹாஸன் திகைத்துப்போய்ச் செய்வதறியாது மூர்ச்சையானான்.

அங்கே அரண்மனையிலே குரூர குணம் கொண்ட ராணி தன் தங்கையை எந்த விதமாகக் கொடுமைக்குள்ளாக்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தாள். மூதாட்டியோ ஒரு மூலையில் நடுங்கியபடி ஒடுங்கி அழுது கொண்டிருந்தாள். குழந்தைகளோ அப்பா வேண்டும் என்று கதறிக் கொண்டிருந்தன. அவர்களை யாராலும் சமாதானப்படுத்த முடியவில்லை.

மறுநாள் திட்டமிட்டபடி முதலில் குழந்தைகளை அனுப்பிய குட்டி இளவரசி சேனு அரண்மனைக்கு வந்தாள், குழந்தைகளுடன் சேர்ந்துகொள்ள. ராணியான நூர் ஒரு திரை மறைவில் நின்று கொண்டிருந்தாள். அம்மாவைக்



கண்டதும் குழந்தைகள் அழுதபடி ஓடி வந்தன.

''எங்கள் அப்பா எங்கே?'' என்று கேட்டன.

தன் செல்வங்களை அள்ளி அணைத்து முத்தமிட்ட அன்னத்தூவி அழகி குரல் அடைக்க, உங்கள் அப்பாவைப் பார்த்தீர்களா? நான் அவரை விட்டுப் பிரிந்து வந்திருக்கவே கூடாது. அவர் இருக்கும் இடம் தெரிந்தால் நான் உங்களை அவரிடம் அழைத்துப் போவேன்'' என்றாள்.

அப்போது தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்ட நூர் கோபம் கொப்பளிக்க, ''கேடு கெட்டவளே! ஒரு மனிதனை மணந்து கொண்ட நீ பெரும் பூதத்தின் மகளா? நீ செய்த காரியத்துக்காக நன்றாகத் துன்பப்படு'' என்றாள். பிறகு தன் அடிமைகளை அழைத்து அன்னத்தூவி அழகியின் கைகால்களைக் கட்டி உருட்டிவிடும்படிக் கட்டளையிட்டாள். குட்டி இளவரசிக்கு உதவ யாருக்கும் துணிவில்லை. ராணி நூரை எல்லோரும் வெறுத்த போதிலும் அவளிடம் எல்லோரும் பயப்படவும் செய்தார்கள்.

நினைவு திரும்பிய ஹாஸன் கோட்டைக்கு வெளியே கடற் கரையில் கிடப்பதைக் கண்டான். நடந்ததெல்லாம் நினைவுக்கு வந்தன. பித்தனைப் போலக் கடற் கரையில் அலைந்தான். வேதனையான வேதனை. துக்கமான துக்கம். இப்படித் திரிந்து கொண்டிருந்தபோது ஏதோ கூச்சல் கேட்டது. இரு குழந்தைகள் சண்டையிட்டுக் கொள்ளும் சத்தம். ஒலி வந்த திசை நோக்கிப் போனான் ஹாஸன். இரு பையன்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சண்டைக்குக் காரணம் ஒரு குல்லாயும் ஒரு வெண்கலக் கழியும்தான்.

''பையன்களே! எதற்காக இப்படிச் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்?'' என்று கேட்டான் ஹாஸன். அந்நியனைக் கண்ட அவ்விருவரும் அவனிடம் ஓடிவந்தார்கள்.



வாண்டு மாமாவின் ''மர்ம மாளிகையில் பலேபாலு'' அருமை. ஒவ்வொரு வாரமும் ஒரே 'த்ரில்லிங்'காக இருந்தது. ஏன் கதையை இவ்வளவு விரைவில் முடித்து விட்டார்?

கே. கண்ணன், சென்னை 41.

''ஐயா, நீங்கள்தான் நியாயம் வழங்க வேண்டும். எங்கள் தந்தை ஒரு பெரிய மந்திரவாதி. அவர் இறக்கும்போது இரண்டு பொருள்களை எங்களுக்கு உரிமையாக்கிப் போனார். இதோ இந்தக் குல்லாயும் கழியும் தான் அவ்விரு பொருள்களும். ஆனால் நாங்கள் இருவரும் இந்தக் கழியையே விரும்புகிறோம். நீங்கள்தான் இதில் நீதி வழங்க வேண்டும்'' என்றனர்.

''சரி. இருவருமே கழியை விரும்புவானேன்? ஒருவர் கழியையும் மற்றவர் குல்லாயையும் எடுத்துக் கொள்ளக் கூடாதா, சச்சரவின்றி?''

''ஏனென்றால் கழியின் மகத்துவம் தான் அதிகம். இதனால் பூமியைத் தட்டினால் பூதங்களின் ஏழு அரசர்களும் ஓடி வருவார்கள். நாம் ஆணையிடுவதை யெல்லாம் செய்வார்கள்.''

''குல்லாயின் மகிமை என்ன?''

''இந்தக் குல்லாவை யார் அணிந்து கொள்கிறார்களோ அவர்கள் பிறர் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போவார்கள். எங்கு வேண்டுமானாலும் அவர்கள் போகலாம். இப்போது எங்களில் கழி யாருக்கு? குல்லாய் யாருக்கு என்பதைக் கூறுங்கள்!''

ஹாஸன் கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்தான். தன் பலங் கொண்ட மட்டும் அதைச் சுழற்றி வீசினான். வெகு தூரத்தில் போய் விழுந்தது அது. ''ஓடுங்கள். யார் அந்தக் கல்லுடன் முதலில் வருகிறார்களோ அவர்களுக்கு இந்த வெண்கலக் கழி'' என்றான் ஹாஸன். சிறுவர்கள் இருவரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள்.

ஹாஸன் மந்திரக் கழியை எடுத்துக் கொண்டான்; குல்லாயைத் தலையில் அணிந்து கொண்டான். தன் அருமைக் குழந்தைகளைக் காண விரும்பி அரண்மனைக்குள் போக எண்ணினான். அடுத்த விநாடி அவன் ராணியின் அந்தரங்க அறைக்குள் இருந்தான். குழந்தைகள் பஞ்சு மெத்தையில் படுத்தபடி கதறி அழுதுகொண்டிருந்தன. அருகே அவன்

நடை மன்னன்!



உலகத்திலேயே அதிக நேரம் தொடர் நடை நடந்தவர் யார் என்று தெரியுமா? தெரியாவிட்டால் பரவாயில்லை. அதற்காக கின்னெஸ் ரிகார்டு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்க வேண்டாம். தொடர் நடையில் ரிகார்டு ஏற்படுத்திய ந. பார்த்தசாரதியைப் பற்றி அதில் இருக்காது. ஏனென்றால் இவர் நம் தமிழகத்தைச் சேர்ந்தவர். கோவையை அடுத்துள்ள போத்தனூர் ஆஸ்பெஸ்டாஸ் தொழிற் சாலையில் வேலை பார்ப்பவர் திரு பார்த்தசாரதி. 27 வயது இளைஞர். இவர் சென்ற ஆண்டு பதினைந்து நாட்கள் இடைவிடாமல் தொடர்ந்து நடந்து உலக ரெகார்டை ஏற்படுத்தி இருக்கிறார். மொத்தம் 371 மணி 45 நிமிஷங்கள். குளிப்பது சாப்பிடுவது போன்ற காரியங்களையும் கூட நடந்து கொண்டே செய்தார் பார்த்த சாரதி. நடப்பது ஒரு கஷ்டமா என்பவர்கள் கொஞ்சம் தொடர் நடை நடந்து பார்த்தால்தான் அதன் சுகம்(!) தெரியும். திரு ந. பார்த்தசாரதி இந்த ரிகார்டையும் முறியடித்து இன்னும் அதிக நேரம் நடந்து காட்ட முடியும் என்று சவால் விடுகிறார். முயற்சியுடையோரால் முடியாதது எதுவுமே இல்லை என்கிறோம். இனி பஸ் ஸ்டாண்டில் கால்கடுக்க நிற்காமல் பார்த்தசாரதியை நினைத்துக் கொண்டு நடையைக் கட்டுவீர்களா?



மனைவி அன்னத்தூவி அழகி கை கால்கள் கட்டப்பட்டு மூர்ச்சையாகிக் கிடந்தாள்.

பார்த்ததுமே தன் மனைவியை இனம் கண்டு கொண்டான் ஹாஸன். தன் நிலை மறந்து கத்தி விட்டான். அவன் குரல் அவள் மயக்கத்தைப் போக்கிவிட்டது. ஹாஸன் தன் தலையிலிருந்த குல்லாயை எடுத்தான். கண் விழித்த அன்னத்தூவியின் பார்வையில் ஹாஸன் தென்பட்டான். அவள் தன் வேதனையை மறந்தாள். ஆனந்தம் கொண்டாள்.

சட்டென்று அவளுக்குத் தன் அக்காவின் நினைவு வரவே, "என் அருமை மணாளா, சீக்கிரம் இங்கிருந்து போய் விடுங்கள். என் சகோதரி வரும் நேரம். உங்களை இங்கு கண்டால் ஆபத்து" என்று பதறினாள்.

"ராணிகளின் ராணியே! என் அழகு மனைவியே! நான் உன்னை மீட்காமல் இங்கிருந்து போக மாட்டேன்" என்றான் ஹாஸன்.

அன்னத்தூவி அழகி விரக்தியோடு சிரித்தாள். "எனக்குச் சாவைத் தவிர விடுதலையோ, வாழ்வோ கிடையாது. நீங்களாவது இங்கிருந்து தப்பிப் பிழைத்துப் போங்கள்" என்றாள்.

"உன்னைத் தனியே விட்டுச் சென்றது என் தவறுதான்!" என்று கூறி, அவள் கண்ணீரைத் துடைத்தான்.

இரவு நெடுநேரமாகி அரண்மனையில் அமைதி சூழ்ந்த பிறகு ஹாஸன் தன் அருமை மனைவியின் கட்டுக்களை அவிழ்த்து விடுதலை அளித்தான். பெரிய குழந்தையைத் தான் தூக்கிக் கொண்டான். சின்னக் குழந்தையை **சேனா** சுமந்தாள். இருவரும் அக்கம் பக்கம் பார்த்து அரண்மனையைக் கடந்து, கோட்டை வாசலுக்கு வந்தார்கள். ஆனால் அதன் பிரும்மாண்டமான கதவு மூடித் தாளிடப்பட்டிருந்தது. வெளியேற வழியில்லை. சேனா விம்மி அழலானாள். இந்த நிலையில் அகப்பட்டுக் கொண்டால் என்ன நடக்குமென்று அவளுக்குத் தெரியும். பாவம், ஹாஸனுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்போது ஒரு குரல் கதவுக்கு மறுபக்கமிருந்து கேட்டது. அது ஹாஸனைக் காப்பாற்றிய மூதாட்டியின் குரல்தான்.

"குட்டி இளவரசியே, நான் கதவைத் திறந்து விடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. என்னையும் உங்களுடன் அழைத்துப் போகவேண்டும்" என்றாள்.

அப்படியே செய்வதாக வாக்களித்தான் ஹாஸன். கதவு திறந்தது.

குட்டிக் கதைகள் அமரர் ராஜாஜி அவர்களின் கதைகளை நினைவூட்டுகின்றன.

'ஷேக்ஸ்பியர்' கதைகளை ஏன் நிறுத்தி விட்டீர்கள்? கல்லூரி மாணவர்கள் எத்தனை விருப்பத்துடன் படித்தார்கள் தெரியுமா? 'கோகுலம்' மூலம் அவரது நாடகங்கள் அனைத்தையும் படித்துவிட எண்ணினேன்.

வித்துவான் கு. மா. சுப்பராஜ், பி.ஏ.,
குமாரபுரம்

ஹாஸனைப் பார்த்த மூதாட்டி, "உங்களிடம் உள்ள மந்திரக் கோலை மறந்து விட்டீர்களா?" என்று கேட்டாள். அப்போதுதான் அவனுக்குத் தன் இடையில் செருகிக் கொண்டிருந்த கழியின் நினைவு வந்தது. உடனே அதைத் தரையில் தட்டினான். பூத அரசர்கள் ஏழுபேர் ஆகாசத்துக்கும் பூமிக்குமாகத் தோன்றியவர்கள் தரையைத் தொட்டு சலாம் செய்து நின்றார்கள்.

"என்னையும், என் மனைவி, குழந்தைகளையும், இந்த மூதாட்டியையும் பாக்தாத் நகருக்குக் கொண்டு போய்விட வேண்டும்" என்றான் ஹாஸன்.

பூதங்களின் அரசர்களான அந்த ஏழு பூதங்களும் "பிரபுவே! மனிதர்களைச் சுமந்து செல்ல எங்களுக்கு அனுமதி இல்லை. ஆனால் பூத உலகத்துக் குதிரைகள் மூன்றை வரவழைத்துத் தருகிறோம். அவை உங்களை எங்கு வேண்டுமானாலும் சுமந்து செல்லும். உங்களைத் தாக்க யார் வந்தாலும் அப்போது அவர்களுடன் போரிட்டுப் பாதுகாப்பளிக்க நாங்கள் வருவோம்" என்றன.

பூதக் குதிரைகள் மீது எல்லோரும் ஏறிக் கொண்டார்கள். பாலைவனத்தின் மீதாக முப்பது இரவுகள் பூதக் குதிரைகள் பிரயாணம் செய்தன. முப்பத்தியோராவது நாள், பின்னால் பெரும் புழுதிப் புயல் எழும்புவதைக் கண்டார்கள். சேனா, பீதியுடன், "அது வாக் வாக் தீவுகளைச் சேர்ந்த பயங்கரமான போர்ப் படைகளின் அடையாளம்" என்றாள்.

ஹாஸன் மந்திரக் கழியைப் பூமியில் தட்டி பூத மன்னர்களை வரவழைத்தான். "அதோ எங்களைத் துரத்தி வரும் படைகளை விரட்டியடிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். பூதங்கள் மகிழ்ச்சி ஆரவாரமிட்டபடி தங்கள் கூட்டத்தாருடன் வாக் வாக் தீவுப் படைகளைத் தாக்கலாயின. இரண்டு நாட்கள் உக்கிர

மான போருக்குப் பிறகு ராணி நூரின் பெரும் படை சின்னா பின்னப்பட்டு, அழிந்தது. நூரையும் கைதியாக்கிக் கொண்டு வந்து ஹாஸனின் முன்னால் நிறுத்தினார்கள்.

தந்தமும் தங்கமும் கொண்டு நிறுவப்பட்டிருந்த பெரிய கூடாரத்தின் நடுவில் உள்ள சொகுசு மேடை மீது வீற்றிருந்தார்கள் ஹாஸனும் அவன் மனைவி அன்னத்தாவி அழகியும். ''உன்னைக் கொடுமைப்படுத்தியவள் இப்போது உன் அதிகாரத்துக்குட்பட்டிருக்கிறாள். அவளுக்கு உன் விருப்பப்படி தண்டனை தரலாம்'' என்றான் ஹாஸன்.

குட்டி இளவரசி சேனா தன் இருக்கையிலிருந்து எழுந்தாள். தன் முன் மண்டியிட்டுத் தலை குனிந்து நிற்கும் தன் சகோதரியின் கட்டுக்களை அவிழ்த்தாள். அவளை அன்புடன் முத்தமிட்டாள். கண்களில் நீர் வழிய, தன் கொடிய செயல்களுக்காகத் தங்கையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள் நூர். ராணி நூரையும், அவர்களை வளர்த்த செவிலித் தாயான மூதாட்டியையும் அவளுடைய சொந்த நாட்டுக்கே இரு பூதக் குதிரைகளில் அனுப்பி வைத்தார்கள்.

ஹாஸனும் அவன் அழகு மனைவியும் குழந்தைகளுடன் ஒரு குதிரையில் பயணமானார்கள். கற்பூர நாட்டுக்கு வந்து அதன் மன்னருக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொடுத்து விடை பெற்றார்கள். பாலைவனத்தினிடையே பளிங்கு மண்டபத்தில் ஆரஞ்சு மரச் சோலை நடுவில் அமர்ந்திருக்கும் ஷேக்கைச் சந்தித்து அவரது அன்புக்குக் காணிக்கையாக மாயக் குல்லாயை அளித்தான். ஏழு சகோதரிகளின் மாமாவான யானை மீது பவனி வந்த பெரியவரைச் சந்தித்து அவருக்கு மந்திரக் கழியைப் பரிசாகக் கொடுத்தான். தங்கத் தூண்களின் மீதாக மரகத விதானம் தாங்கி நிற்கும் மாளிகைகளையும் நீரூற்றுக்களையும் கண்டு களி கொண்டான். அவனுடைய ஏழு சகோதரிகளின் இருப்பிடம் அல்லவா அது? அவர்களுடன் பத்து நாள் தங்கியபின், பாலைவனத்திடையே மறுபடி பிரயாணம் செய்து வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். கதவைத் தட்டினான் ஹாஸன். குரல் கேட்டு மகன் என்று அறிந்து மகிழ்ச்சி தாங்காமல் மூர்ச்சையாகிப் போனாள் தாயார்.

மனைவியோடும், அருமைக் குழந்தைகளோடும் ஆனந்த வாழ்க்கை வாழலானான் ஹாஸன்—அமைதியின் இருப்பிடமான பாக்தாத் நகரிலே.

(முற்றும்)

ஆரடங்



ஸ்டெனோ: சார் தயவு செய்து 'டியர் ஸார்'க்கும் தாங்க் யூ' விற்கும் இடையே உள்ளதை மறுபடி சொல்லுங்களேன்,

—எம். பத்மநாபன்



முதல் பைத்தியம்: எனக்கு நாலு பாஷைகளில் பேசத் தெரியும்.

இரண்டாம் பைத்தியம்: அப்படியா? எனக்குப் பதினாறு பாஷைகளில் மௌனமாக இருக்கத் தெரியும்.


உப்பிலி ஸ்ரீனிவாசன்



பெண்: பெரிய பையன் ரொம்பக் கஷ்டப் படுறான் டாக்டர். மனசு கேட்க மாட்டேங்குது.

ENT டாக்டர்: நான் காது கேக்கலேன்னு வைத்தியம் பண்ணுவேன். மனசு கேக்கலேன்னு என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியாதுங்களே!

. கு. தனபாலன்




வேலன்: இது ஒரு காலத்தில் பணக்காரம் பாம்பாகத்தானிருந்தது. இப்போது ஏழையாகி விட்டது.

ராஜன்: ஏன் அப்படி?

வேலன்: படம் எடுத்தது, போண்டியாய் போச்சு!


ந. கணேஷ்



எஜமானி: ஏண்டா முனியா, பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே வேலைக்கும் போறேன்னு சொல்றியே, உனக்கு முன் அனுபவம் வேண்டாமா?

முனியன்: நம்ம வீட்டிலே பத்து வருஷம் வேலை பார்த்திருக்கேனுங்களே அது போறா துங்களா?

எஸ். பத்மாவதி.



சிறுவன்: எங்களுக்கு டிக்கட் உண்டா?

கவுண்டரில் இருப்பவர்: பன்னிரண்டுக்குக் கீழே என்றால் வாங்க வேண்டாம்.

சிறுவன்: அப்படியா? நல்லவேளை. நாங்க ஏழுபேர்கள்தான்.

—சுதன்

நிலா சிரித்தது



எஸ். சியாமளா

6. சலனம்

பானு... இவளிடம் என்ன மாய சக்தி இருக்கிறது! அவளுக்குப் பெற்றோர் இல்லை என்ற குறை ஒன்றைத் தவிர வேறென்ன? இந்துவின் அப்பா பானுவிடம் உயிராக இருக்கிறார். தினமும் அவளிடம் இரண்டு வார்த்தைகளாவது பேசாமல் அவர் தூங்கப் போவதில்லை. அவருடைய சின்ன வயதில் பானுவின் அம்மா அவருக்கு எத்தனையோ உதவி செய்தாளாம்..., அவரை வாழ வைத்ததே அவள் தானும். நன்றியோடு அவர் சொல்லும் போது இந்துவுக்குக் கூட பானுவின் அம்மா அத்தனை நல்லவளா ,என்று வியப்பு உண்டாகும். சரி, விசுவாசத்தினால் நன்றி மறக்காததால் அப்பா பானுவைத் தன் ஆதரவில் வளர்க்கிறார். இந்துவின் அம்மா கூட பானுவிடம் எத்தனை அன்பு காட்டுகிறாள். அவள் சின்னச் சின்னக் காரியங்கள் செய்தால்கூடச் சிரித்துப் பாராட்டுகிறாள்.

சுந்தரி மாமி பானுவிடம் எதையாவது சளசள வென்று பேசிக் கொண்டேயிருக்கிறாள். ஏன்...? அவளும் 'அப்படியா மாமி?' என்று கதை கேட்கிறாள். பொன்னி, பானுவுக்குத் தான் பார்த்த சினிமாக் கதைகளைக் காட்சி காட்சியாக விவரிப்பாள். அவள் கைகளை ஆட்டி, முகத்தை சுளுக்கிக் கண்களை வெட்டி, சினிமா நக்ஷத்திரங்களைப் போல நடந்து, பேசிக் காட்டுவாள். பானுவோ, கை தட்டிச் சிரித்து மகிழ்வாள். ''பொன்னி பொன்னி! அந்த 'மேகலா' மாதிரி பேசிக் காட்டேன்.'' என்று பானு அவளை உற்சாகப்படுத்துவாள்.

தினமும் மாலை நேரங்களில் கபாலி பானுவை ஒவ்வொரு செடியருகிலும் அழைத்துப் போய் 'இத பாரு, பானு! இந்த மல்லி மொட்டு விட்டிருக்கு.. இத பாரு ரோஜா மொட்டு.. அதோ பாரு, கத்திரிப் பிஞ்சு.'' என்றெல்லாம் காட்டுவான்.

கார்த்திக்... அவன்கூட 'பானுக்கா பானுக்கா!'' என்று அவளையே சுற்றிச் சுற்றி வருகிறான். அவளோடுதான் சாப்பிடுகிறான். விளையாடுகிறான். அவளிடம் பாடம் கற்றுக் கொள்ளுகிறான்... ஏன். ஏன்?

சுந்தரி மாமி இரண்டு வருஷங்களாகச் சமையல் செய்கிறாள். இந்துவிடம் அதிகம் பேசுவதில்லை. பொன்னியும் கபாலியும் நாலைந்து வருஷமாக இருக்கிறார்கள். ஏதோ ஒன்றிரண்டு பேச்சுக்கள்தான். ஏன், ஏன்? இந்து ஊன்றிக் கவனிக்கத் தொடங்கினாள்.

''மாமீ! இன்றைக்குத் தோசை மெத்மெத்துன்னு பூமாதிரி நன்றாக இருந்தது.. இத்தனை நன்றாக எப்படி மாமீ செய்கிறேள்...?''

''மாமீ! எனக்கு முன்னெல்லாம் கத்தரிக்காய் பிடிக்கவே பிடிக்காது... இப்ப பாருங்களேன். மீதியே வைக்காமல் சாப்பிடுகிறேன். உங்கள் கை ரொம்ப வாசனை. ரொம்ப நன்றாக இருக்கு.......'' இப்படி ஒவ்வொரு நாளும் பானு சுந்தரி மாமியிடம் சிரித்துச் சிரித்துப் பாராட்டுகிறாள். ஆனால் இதுவரை இந்து

அந்த மாமியின் சமையல் பற்றி ஒன்றுமே பேசியதில்லை.

பொன்னி பாத்திரங்களை தேய்த்துக் கழுவி வைப்பாள். பானு அவைகளை உள்ளே கொண்டு போவாள். ''நீ.. ஏம்மா பானு செய்யணும்.. இரு.. இரு.. நான் கொண்டு வைக்கிறேன்.'' என்று பொன்னி எத்தனை தடுத்தாலும் சிரித்துக் கொண்டே பானு எடுத்துப் போவாள். துணிகளைத் துவைத்தால் சின்னச் சின்ன துணிகளைப் பிரித்துக் கயிற்றில் காய வைப்பாள் பானு. பொன்னி 'வேண்டாம்' என்று லும் கேட்க மாட்டாள்.

''எனக்கு ஆசையா யிருக்கு பொன்னி'' என்பாள். சிலசமயம், ஏன் பொன்னி! நான் சரியா உலர்த்த மாட்டேன் என்றுதானே சொல்றே...?'' என்பாள். சிலசமயம். ''நீ சீக்கிரம் வேலே முடிச்சுட்டு வந்தால்தான் கதை சொல்லுவாய்'' ''இல்லையா. கார்த்தி?'' என்று தம்பியைச் சிபாரிசுக்கு அழைப்பாள்.

இந்து இதுவரை பொன்னியின் வேலைகளில் தலையிட்டதில்லை. மாலை நேரங்களில் தன் தோழிகளோடு விளையாடுவாளே தவிர வேலைக்காரியோடு சிரித்துக் கதை பேசியதில்லை.

பானு வருவதற்குமுன் கார்த்திக் ''இந்து, இந்து பொம்மை விளையாட்டு விளையாடலாம்... கண்ணு மூச்சி விளையாடலாம்... வா, வா'' என்று ஆசையாக அழைப்பான். அவளோ ''போடா.. போடா..! உன்னோடை யாரு பொம்மை விளையாடுவாளாம். உன் ப்ரண்ட்ஸ்களை கூப்பிட்டுக் கொள். உனக்கு என்னோடு பந்து, 'ரிங்' விளையாட முடியுமாடா..? நான் மாட்டேன். ப்ரீதா, கலா வரான். நான் போறேன்...'' என்று ஓடி விடுவாள். குழந்தை ஏக்கப் பார்வையோடு உட்கார்ந்து விடுவான். அவனுடைய ஏக்கத்தைப் பானு தீர்த்து விட்டாள். அவன் இந்துவிடம் கெஞ்சுவதில்லை. இந்து ஏன் அப்படி இருக்கிறாள்.

அவள் சுந்தரியை ஒரு சமையல் காரியாக மட்டுமே நினைக்கிறாள். அவளைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்ததே இல்லை. பொன்னியும் சுபாவியும் வீட்டு வேலைக்காரர்கள். அவர்களோடு பேச வேண்டும் என்று





நஞ்சிருக்கும் நாகம் மென்று
கொஞ்சி நடனம் ஆடுவான் - அது
நெஞ்சிருக்கும் அகந்தை என்று
இதை வழி கூறுவான்.

நெஞ்சி லூறும் கொடிய குணம்
நீக்கும் கண்ணன் பாதமே — அதை
தஞ்சம் என்று கொண்டவர்க்குத்
தாழ்வு இல்லை நாளுமே.

- குடுக்கையார்

வண்ணப்படம்: திருச்சி ஜே. சடகோபன்

இந்துவுக்கு தோன்றியதே இல்லை. அவர்களை அவள் வேலைக்காரர்கள் என்று ஒதுக்கி விட்டாள். அவர்களும் அவளைச் சின்ன எஜமானி என்று ஒதுங்கியிருக்கிறார்கள். அது அவர்களுடைய தவறல்லவே.

பானு சமையல்காரி, வேலைக்காரி, என்று வித்தியாசமாய் எண்ணாமல் அவர்களோடு சகஜமாகப் பேசுகிறாள். தன்னை மதித்துக் கேட்கும் சின்னப் பெண்ணிடம் அவர்களும் உற்சாகமாகப் பேசுகிறார்கள்.

இந்துவுக்கு இப்போது புரிந்தது.

ஒருநாள் வாசீசன் கையில் ஒரு கடிதத்துடன் வந்தார். ''பானு.. பானு...'' என்றழைத்த போது, ''என்ன மாமா...'' என்று ஓடி வந்தாள் சிட்டுப் போல. ''பானு! கிராமத்திலிருந்து லெட்டர் வந்திருக்கிறது. உன்னோட சிநேகிதிகள் எல்லோரும் உன்னைப் பார்க்க ரொம்ப ஆவலாக இருக்கிறார்களாம். நிலவரி விஷயமாக மணியக்காரர் எழுதியிருக்கிறார். தீபாவளியை ஒட்டி இரண்டு நாள் லீவு எடுத்துக் கொண்டு போகலாம் என்றிருக்கிறேன்.. நீயும் வருகிறாயா..? இந்து! நீகூட வரலாமே. நீ கிராமங்களையே பார்த்ததில்லையே...'' என்றார்.

''சரி மாமா! நானும் வருகிறேன். அவர்களைப் பார்க்க எனக்கும் ஆசையாக இருக்கு...'' என்று சந்தோஷத்துடன் கூறிய பானு ஆவலாக இந்துவை நோக்கினாள். இந்துவின் மனம் அசைந்தது.

''நானும் வரேன். அப்பா!'' என்றாள் இந்து. ''அப்பா.! நானு...' என்று கொஞ்சியபடி கார்த்திக் தந்தையின் கால்களைக் கட்டிக் கொண்டான் ''அம்மா இல்லாமல் உன்னை எப்படியடா அழைத்துப் போக முடியும்?'' தயங்கியபடி வாசீசன் சொன்னபோது பானு குறுக்கிட்டாள்.

''பரவாயில்லை. மாமா, அவன் ஒன்றும் தொந்தரவு செய்ய மாட்டான். நான் கவனிச்சுக்கறேன். இந்துவும் வராள். ஒன்றும் கஷ்டமில்லை மாமா. கார்த்திக்கும் வரட்டும்...'' என்ற போது மூவரும் உற்சாகமாகத் துள்ளிக் குதித்தபடி தோட்டத்துக்கு ஓடினார்கள். இரண்டு நாட்கள் கழித்து தீபாவளிக்கு லீவு விட்டபோது கிளம்பினார்கள். சொர்ணம் அவர்களுக்குத் துணிமணிகள் படுக்கை எல்லாம் தயார் செய்து கொடுத்தாள். காரை வாசீசனே ஓட்டிக் கொண்டு வந்தார். வெளிப்புற இயற்கை காட்சிகளையும், அந்தந்த ஊர்களையும் பார்த்துக் கொண்டே வந்தார்கள். கிராமத்துக்குள் நுழையும்போதே குடியானவ ஜனங்கள் ''பானு வராள், பானு வராள்'' என்று பின்னோடு ஓடி வந்தனர். அக்ரஹாரத்தில் அத்தனை வீட்டாரும் பானுவின் வீட்டருகில் கூட்டமாகக் கூடி விட்டனர். இந்து பிரமித்து உட்கார்ந்து விட்டாள்.

பானுவிடம் ஊர் ஜனங்களுக்கு இத்தனை ஆசையா, இத்தனை பாசமா?

'அபிதா ஆரம்ப பாடசாலை' என்ற போர்டைக் கண்டதும் வாசீசனும் பானுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். . இருவர் கண்களும் கலங்கின. பானுவுக்குத் தாயின் நினைவு நெஞ்சில் கனத்தது. இதழ்கள் துடித்தன. வரவேற்ற ஜனங்களிடையே விசும்பல் ஒலி சூழ்ந்தது. துயரம் கண்களில் கலக்க மகிழ்ச்சி இதயங்களில் படர மணியக்காரர் ''வாங்க சார்! வாம்மா பானு..'' என்று உபசரித்தார். காரிலிருந்து இறங்கியதும் ''பானு! எப்படியம்மா இருக்கே? ''கொழந்தே! எப்படிம்மா இருக்கே? ''நல்லாயிருக்கியா? தாயி..! ''சௌக்கியமாடி...? கண்ணு...?'' அத்தனைப் பெண்களும் சூழ்ந்து கொண்

டனர் பானுவை. அந்த அன்பில் உருகி நின்ருள் பானு.

''ஓ.. நான் நல்லாயிருக்கேனே. நீங்க எல்லோரும் எப்படி இருக்கீங்க'' என்று பெரிய மனுஷிபோல விசாரித்தாள்.

''வழியை விடுங்க. வழியை விடுங்க ஐயாவும் குழந்தைகளும் உள்ளே வரட்டும். ரொம்பக் களைப்பா இருப்பாங்க. வேலு!.. இளநீர் கொண்டாந்து கொடுப்பா...!'' மணியக்காரரின் குரலுக்கு அத்தனை பேரும் பணிந்து ஒதுங்கி வழிவிடவும் வீட்டினுள் நுழைந்து கூடத்துக்குச் சென்றனர். கூடத்துச் சுவரில் பானுவின் பெற்றோருடைய போட்டோ மாட்டப்பட்டு பூமாலை சார்த்தப்பட்டிருந்தன. சில விநாடிகள் அங்கு துக்கம் நெஞ்சில் பொங்க பானு நின்ருள். அந்தக் குழந்தையை அணைத்துக் கொண்டு, ''வாம்மா பானு! இங்கே பெரியவங்க பேசிக் கொண்டிருக்கட்டும். குழந்தைங்க மூனு பேரும் எங்க வீட்டுக்கு வாங்கம்மா. பலகாரம் சாப்பிட்டுட்டுப் பேசலாம்.'' என்ருள் மணியக்காரரின் மனைவி. பானு தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

''மாமி! இவ இந்து. இவன் கார்த்திக். மாமாவோட குழந்தைகள்..'' என்று அறிமுகப்படுத்திவிட்டு அவளோடு கிளம்பினள். ''இந்து! கார்த்தி... வா.. போகலாம்..'' என்ருள்.

அது பிற்பகல் நேரம். டிபனும் இளநீரும் சாப்பிட்டார்கள். பானுவின் தோழிகள் அவளைச் சூழ்ந்துகொண்டு ஏதேதோ பேசினர்கள். பானுவும் அத்தனை பேரிடமும் ஏதேதோ விசாரித்தாள். வயதானவர்கள் இடை இடையே தங்களுக்குள் வாசுகியைப் புகழ்ந்து கொண்டனர். அவர்களுடைய பேச்சு இந்துவுக்குச் சந்தோஷம் உண்டாக்கியது. கள்ளம் கபடமற்ற கிராமத்து ஜனங்களின் அன்பை அவள் மனதுள் வியந்து கொண்டாள். இத்தனை பேருடைய அன்புக்குப் பாத்திரமான பானுவும் அவள் பெற்றோரும் எத்தனை நல்ல குணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்!

இந்துவின் அறிவுக்குச் சில உண்மைகள் எட்டியது. அன்பை பெற வேண்மானல் 'நாமும் பிறரை நேசிக்க வேண்டும். பிறருக்கு உதவி செய்தால் அதன் பலன் நமக்கும் உதவி கிடைக்கும்.

அகங்காரத்தினல் அன்பைப் பெற முடியாது. கர்வத்தினல் சந்தோஷம் அடைய முடியாது, என்பதெல்லாம் அந்த கிராமத்தில் ஒருநாள் முழுதும் தங்கியிருந்தபோது இந்து புரிந்து கொண்டாள்.

பாலாற்றங்கரை மணலில், மாலை நேரத்தில் கிராமத்துக் குழந்தைகளோடு விளையாடினர்கள். இரவு மணியக் காரரின் வீட்டில் உணவு உண்டு பானுவின் வீட்டில் படுத்து உறங்கினர்கள். கார்த்திக் தந்தையிடம் தான் விளையாடியதைச் சொல்லி ஆனந்தப்பட்டான். மறுநாள் பகல் வரை அங்கு இருந்தனர். நிலம் விஷயமாக நல்ல ஏற்பாடுகளைச் செய்தார் வாசுகன். பள்ளிக் கூடமாக இருக்கும் பானுவின் வீட்டுக்கு வாடகையாகக் குறிப்பிட்ட தொகை மாதாமாதம் பானுவுக்கே அனுப்ப ஏற்பாடு ஆகியது.

ஸ்ரீ ரமணர்

தியானம் செய்யும் போது நானாவித எண்ணங்கள் மனத்தில் கிளம்புகின்றன. அதுவும் நல்லதற்கே; ஏனென்றால் உள்ளே மறைந்து கிடக்கும் அவை தாமாக வெளியேறினலொழிய அவற்றை அழிப்பது எப்படி? எண்ணங்கள் தாமாக எழஎழ அவை நசித்து நசித்து மனம் பலமடைகிறது.

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள்

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

மூளைக்கு வேலை

* ஒரு விமானம் A என்ற இடத்திலிருந்து B என்ற இடத்துக்குப் போக ஒரு மணி இருபது நிமிடங்கள் ஆகின்றன. அதே விமானம் Bயிலிருந்து Aக்குத் திரும்பி வர எண்பது நிமிடங்களாகின்றன. இது எப்படி?

விடை: விமானத்தில் கோளாறல்ல உங்கள் சிந்தனையிலேதான் குறை. எண்பது நிமிடமும் ஒரு மணி இருபது நிமிடமும் ஒன்றுதானே!



கரம் மிக்சர்



'பாய்காட்' எப்படி வந்தது...?

பாய்காட்—என்ற ஆங்கில வார்த்தைக்குப் பகிஷ்கரித்தல் என்று பொருள். இந்த வார்த்தை எப்படி ஏற்பட்டது தெரியுமா..? அயர்லாந்தில் உள்ள மேயோ (Mayo) என்ற மாகாணத்தின் பண்ணையாளரான லார்டு எர்னி என்பவரின் காரியஸ்தருக (land agent) இருந்தார், காப்டன் சார்லஸ் கன்னிங்ஹாம் பாய்காட் என்பவர். 1880—ம் வருஷம், பண்ணை நிலத்தில் குடி இருந்த விவசாயிகள் தங்களிடம் வசூலிக்கப்படும் வாடகை மிக அதிகமென்று கூறி எல்லோரும் ஒரு குறிப்பிட்ட வாடகையைத்தான் (குறைத்து) கொடுக்க முடியும் என்று கூட்டாகப் புரட்சி செய்தார்கள். அந்தக் குறைந்த வாடகையை பாய்காட் ஏற்க மறுத்துவிட்டார். ஆகவே, குடியிருப்போர் அவரைப் பழிவாங்க ஒரு திட்டமிட்டார்கள். அவர் நிலத்தின் விளைச்சலை அறுவடை செய்ய எந்தத் தொழிலாளியையும் போகாதபடி தடுத்தார்கள். அவரிடமுள்ள பணியாளர்களையும் பலவந்தமாக வெளியேற்றினர்கள். அதாவது, அவரை எல்லோரும் ஒதுக்கி வைக்கும்படிச் செய்தார்கள். வடக்கு அயர்லாந்திலிருந்து 900 போர் வீரர்கள் அவருடைய உதவிக்கு வந்தார்கள். காப்டனைப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு போனுர்கள்.

இப்படிப் பண்ணை நிலத்தில் குடி இருப்போர் நடத்திய இந்தப் போராட்டமே பின்னல் 'பாய்காட்' என்ற சொல்லாகவே நிலைத்துவிட்டது. ஒருவருடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாமல், அவருக்கு எதையும் விற்காமல், அவரிடமிருந்து எதையும் வாங்காமல், அவருக்காக யாரும் பணி புரியாமலிருப்பதையே 'பாய்காட்' -பகிஷ்கரித்தல் என்ற பொருளில் பயன் படுத்தலானுர்கள்.

கோந்து (Gum) என்றல் என்ன?

சிலவகை மரங்களிலிருந்து ஒருவகைக் கெட்டியான ஒட்டிக் கொள்ளக்கூடிய திரவம் வெளிப்படுகிறது. இது காற்றுப் பட்டுக் கெட்டியாகிவிடும். மறுபடியும் நீரில் போட்டால் கரையக்கூடிய தன்மையுடையது. இந்தத் தாவரப் பொருளையே கோந்து என்கிறோம். கோந்தின் உபயோகமோ ஏராளம். முக்கியமாக நீங்கள் வாயில் போட்டு மென்று கொண்டேஇருக்கிறீர்களே. 'சிக்லட்' அதுவும்கூடக் கோந்துதான். கோந்தில் எத்தனையோ வகைகள் உண்டு.

கருவேல மரத்தின் கோந்துக்கு 'கம் அராபிக்' என்றுபெயர் ஆங்கிலத்தில். இந்தக்கோந்து, மிட்டாய்கள் செய்யவும், மருந்துகள் தயாரிக்கவும், பட்டு உற்பத்தியிலும், பசையாகவும் பயன்படுகிறது. கருவேலமரத்துக்கு அக்காஷியா என்றுபெயர். இதிலும் பலவகை உண்டு. ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா. ஆசியா இங்கெல்லாம் அக்காஷியா மரங்கள் ஏராளம். கருவேல கோந்து நல்ல மஞ்சள் கண்ணுடி போலவோ அல்லது சிவந்த நிறத்திலோ கட்டிகளாகக் கிடைக்கிறது. சில கோந்துகள் நீரில் கரைவதற்குப்பதில் நீரை உறிஞ்சிக் கொண்டு மிருதுவான கொழகொழப்பான ஜெல்லி போலாகிவிடும். இப்படியாகும் கோந்துகளை 'கம் டிராகன்' என்றழைக்கிருர்கள். இவ்வகைக் கோந்துக்கள் இருமல் மருந்துகள் தயாரிக்கவும், ஆடைகள் தயாரிக்கும் ஆலைகளில் துணிகளுக்குக் கஞ்சிப்பசை போடவும் பயன்படுகின்றன.

செர்ரி என்ற மரத்திலிருந்து கிடைக்கும் கோந்து மிக முக்கியமானது. வைக்கோல் குல்லாய்கள் தயாரிக்க வைக்கோல்களையும் மற்ற பொருள்களையும் விறைப்பாக்கப் (கெட்டியாக்க) பயன்படுகிறது. ப்ளம், பீச், ஸ்புரூஸ், சிக்கிள் என்று கோந்துகளில் பலவிதம். சிக்கிள் கம்மைக் கொண்டு சூயிங்கம் தயாரிக்கிருர்கள். எல்லாக் கோந்துகளுமே — இங்க், துணிகள், காகிதம், மருந்துகள் தயாரிப்பில் பயன்படுகின்றன. இன்னும் சில உயர்ந்த வகைக் கோந்துகள் மருத்துவ ஆராய்ச்சிகளில் செயற்கை முறைத் தயாரிப்புகளுக்குப் பயன்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட நிஜமான கோந்து வகைகளைத் தவிர இன்னொரு வகைக் கோந்துகளும் உண்டு. குங்கிலியம் இதற்கு உதாரணம். இதை ரெஸின் (Resin) என்பார்கள் ஆங்கிலத்தில். இவையும் தாவரங்களிலிருந்துதான் கிடைக்கின்றன. கோந்துக்கும் இந்த ரெஸின் என்ற ரோஜனத்துக்கும் நிறைய வித்தியாசமுண்டு. ரெஸின்கள் நீரில் முழுதும் கரைவதில்லை.


ரெஸின்களில் மிகவும் பிரபலமானது சாம்பிராணி. வாசனைத் திரவியங்கள் தயாரிப்பில் இந்த ரெஸின்கள் உபயோகப் படுகின்றன.

விந்தை உலகம்

ஆழி



நாம், இடப்பக்கத்திலிருந்து வலப் பக்கத்திற்குத்தானே எழுதிக்கொண்டு போகிறோம்..? ஆனால், ஜப்பானியர்கள் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கத்திற்கு எழுதிக்கொண்டு வருவார்கள்! அதுமட்டுமல்ல; அவர்கள் ஒவ்வொரு வரியையும் படுக்கை வசத்தில் எழுதமாட்டார்கள். மேலிருந்து கீழாக, செங்குத்தாக எழுதிக் கொண்டு வருவார்கள்! நமக்குப் புத்தகத்தின் கடைசிப் பக்கமாக இருப்பது அவர்களுக்கு முதல் பக்கம்!



தேன் தித்திக்கும் என்பது தெரிந்ததுதான். ஆனால், மலேசியாவில் கிடைக்கும் தேன் கசக்கும்! ஏன் தெரியுமா? அங்கே அதிகமாக வளரும் ரப்பர் மரத்தின் பூக்களிலிருந்து கிடைக்கும் தேன் கசக்கிறது! மலேசியாவுக்கு நம் நாட்டிலிருந்துதான் தேன் ஏற்றுமதியாகிறது!



எதையாவது கொலை செய்துவிட்டால், உடனே நீரோடைக்குச் சென்று குளித்த பின்புதான் காட்டுயானைகள் மறுபடி ஆகாரம் உண்ணும்!



திபேத்தியர்கள், தங்களுக்குக் குழந்தை பிறந்தால், குழந்தையின் பிறந்த நாளையும் சேர்த்தே பெயர் வைப்பார்கள்! உதாரணம்: புதன்-தாங்மே, வியாழன்-தஸ்ராங்!



உலகிலேயே சோவியத் நாட்டில் உள்ள ஜார்ஜியாவில்தான் அதிகவயதுடையவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கே 100 வயதைத் தாண்டியவர்கள் 2000-க்கு மேல் இருக்கிறார்கள்!



தெரியுமா?

2951. பெரிய கரடி ஏரி (Great Bear Lake) எங்குள்ளது?

2952. மார்ச், மே, ஜூலை, அக்டோபர் ஆகிய மாதங்களைத் தவிர மற்ற மாதங்களின் 13ந் தேதியை ரோமானியர்கள் எப்படி அழைத்தார்கள்?

2953. தி மெயின் (The Main) என்பது எந்த நதியின் உப நதி?

2954. மெஸ்ஸினு துறைமுகப்பட்டினம் எந்த நாட்டில் உள்ளது?

2955. சில வருஷங்களுக்கு முன்பு ராணி எலிஸபெத் கரிபீனுக்குச் சென்றிருந்தபோது மேற்கிந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர் ஒருவருக்கு 'நைட்' பட்டம் வழங்கினுர். அவர் யார்?

2956. வாம்பாட் (Wambat) என்பது என்ன?

2957. எஸ்பராண்டோ (Esperanto) என்ருல் என்ன?

2958. மாடல் 'T'–என்ற மோட்டார் காரை முதன் முதலில் உற்பத்தி செய்தவர் யார்?

2959. எந்தத் தீவுக் கூட்டத்தில் சார்க் (Sark) என்ற தீவு உள்ளது?

2960. சிட்டர்ன் (Cittern) என்பது என்ன?

2961. தென் அமெரிக்காவின் தெற்கு முனைக்கு என்ன பெயர்?

2962. லான்ஸ் டேல் பெல்ட் விருது எந்த விளையாட்டுக்கு வழங்கப்படுகிறது என்று தெரியுமா?

2963. மிகப் பெரிய சர்வாதிகாரி (The great Dictator) என்ற ஆங்கிலப் படத்தின் கதாநாயகனுகத் தோன்றியது யார்?

2964. மெக்ஸிகோ நாட்டின் புராதன ஆஸ்டெக் இனத்தவர்களின் கடைசி மன்னனின் பெயர் என்ன?

2965. டோங்கா தீவு எந்தக் கடலில் உள்ளது?

2966. கலிகுலா என்பவர் யார்?

2967. அலிகாண்டே (Alicante) துறைமுகப் பட்டினம் எந்த நாட்டில் உள்ளது?

2968. பிரிட்டன் தசாம்ச நாணயச் செலாவணியைப் பின்பற்றியது எந்த ஆண்டில்?

2969. சாரிங் கிராஸ் என்னுமிடத்திலுள்ள — ஹங்கர் ஃபோர்டு தொங்கு பாலத்தை நிர்மாணித்தவர் யார்?

2970. டெக்ஸாஸிலுள்ள டல்லாஸில் 1963ல் படுகொலை செய்யப்பட்ட அமெரிக்க ஜனுதிபதி யார்?

2971. இரண்டாம் எலிஸபெத் ராணியின் கடைக்குட்டி இளவரசனின் பெயர் தெரியுமா?

2972. டக்டிலிட்டி (Ductility) என்ருல் என்ன?

2973. யூக்ஸைன் (Euxine) என்பது ஒரு கடலின் புராதனப் பெயர். அது எந்தக் கடல்?

2974. ஸ்னூக்கர் (Snooker) என்ற விளையாட்டில் வெள்ளையைத் தவிர வேறு எந்த வண்ணப் பந்துகள் உபயோகிக்கப் படுகின்றன?

2975. க்ரைஃபான் (Gryphon) என்பது என்ன?

தெரியுமே!

2951. கனடாவில். 2952. இட்ஸ் (Ides) என்று. 2953. ரைன் நதியின். 2954. இத்தாலி நாட்டின் ஸிஸிலியில். 2955. ஸர்கார் பீல்டு சாபர்ஸ். 2956. பூமியில் வளை தோண்டி வாழும் குட்டிக் கரடி போன்ற ஓர் ஆஸ்திரேலிய மிருகம். 2957. டாக்டர் எல். எல். ஜாமன்ஹாஃப் (Dr. L. L. Zamenhof) என்பவர் கண்டுபிடித்துள்ள சர்வதேச மொழி. 2958. ஹென்றி போர்டு. 2959. சானல் தீவுக் கூட்டத்தில் (The Channel Islands). 2960. தந்திகளால் மீட்டக்கூடிய ஓர் இசைக் கருவி. 2961. ஹார்ன் முனை (Cape Horn). 2962. குத்துச் சண்டை வீரருக்கு. 2963. சார்லி சாப்ளின். 2964. இரண்டாவது மாண்டேஸுமா. 2965. பசிபிக் கடலில் 2966. ரோமானியச் சக்கரவர்த்தி. 2967. ஸ்பெயின் தேசத்தில். 2968. 1971 முதல் அமலுக்கு வந்தது. 2969. இஸாம்பார்டு கிங்டம் ப்ரூனல் என்பவர். 2970. ஜான் எஃப். கென்னடி. 2971. எட்வர்டு. 2972. எந்த ஒரு உலோகத்தைக் கம்பிகளாகவும், கயிறுகளாகவும் நீட்ட முடிகிறதோ அதற்கு இப்பெயர். 2973. கருங்கடல். 2974. சிகப்பு, மஞ்சள், பச்சை, நீலம், கறுப்பு, பிங்க், பிரௌன். 2975. இதிகாச காலத்துக் கற்பனை மிருகம். கழுகின் தலையும் இறக்கையும் சிங்க உடலும் கொண்டது.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press Guindy, Madras - 600032.
Editor: K. R. Athmanathan
GOKULAM FORTNIGHTLY, GUINDY, MADRAS - 600032